தரம் 5 – 11 வரை

# AHARAM அகரம்

எண்: 04 எழுத்து: 10 ஒக்டோபர் 2010



## உலக ஆசிரியர் தினம்

05 ஒக்டோபர் 2010




## இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்)



Cover Design: S.M. Anees

30/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸலாம் சொல்வோம்; அன்பைப் பரிமாறுவோம்!

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

“நீங்கள் ஈமான் கொள்ளாத வரை சுவனம் நுழைய மாட்டீர்கள். நீங்கள் உங்களது அன்பை பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளாத வரை ஈமான் கொண்டவர்களாக மாட்டீர்கள். உங்கள் அன்பை நீங்கள் எவ்வாறு வெளிப்படுத்துவது என்று நான் உங்களுக்கு சொல்லித் தரட்டுமா? நீங்கள் மற்றவர்களுக்கு உங்கள் ஸலாத்தை சொல்வதே அவ்வழிமுறையாகும்.“ (முஸ்லிம்)

எனவே, நாம் நண்பர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள், அயலவர்கள், பெற்றோர் அனைவரை சந்திக்கும்போதும் புன்முறுவலோடு ஸலாம் சொல்வோம்; அன்பைப் பரிமாறுவோம்; சுவனம் நுழைவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம்

எண்: 04 ஒக்டோபர்: 2010 எழுத்து: 10

**பிரதம ஆசிரியர்**

ஏ.ரி.எம். நௌபல்

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.சீ. அகார் முஹம்மத் (நளீமி)

(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED

(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,

தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc

(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**நிருவாக ஆசிரியர்**

ஆர். அப்துல்லாஹ் அஸ்ஸாம் (இஸ்லாஹி)

**பொறுப்பாசிரியர்**

எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

**உதவி ஆசிரியர்**

ஜே.எம். அஸீம்

**கணினி வடிவமைப்பு**

ஏ.ஏ. முஹம்மத் பவாஸ்

**சந்தா விபரம்**

1 வருட சந்தா 550 /-

6 மாத சந்தா 275 /-

**தொடர்புகளுக்கு:**

**அகரம்**

77, தெமடகொட வீதி,

கொழும்பு - 09.

தொ.பே: 011 268 9324, 011 720 6575

பெக்ஸ்: 011 2686030

Email: aharamipc@gmail.com

## உள்ளே...

**அல்லாஹ்வின் அற்புதப் படைப்பு**






**பரீட்சைக் கால பயனுள்ள ஆலோசனைகள் சில...** 23-25



**ஆசிரியர் தினம்** /16

**சர்வதேச மொழி**

- அரபு 20 - 22
- English 17 - 19

**இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்)**

**பாடத்திட்டம்**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | 30 - 32 |
| வரலாறு | 15 |
| தமிழ் | 12 |
| கணிதம் | 26- 29 |
| கவிதைச் சரம் | 41 |
| சிறுகதை | 42 - 44 |

**கல்லில் மலர்ந்த புஷ்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
நூலகம் யாழ்ப்பாணம்.

# ஆசிரியர் தினம் எதற்காக?

**உலக** ஆசிரியர் தினத்தைக் கொண்டாடும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு அகரத்தின் இனிய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். ஆசிரியம் என்பது பரந்த கருத்தில் உபயோகிக்கப் படும் ஒரு பிரயோகம். ஒரு விடயத்தை ஒருவரிடம் கற்றுக் கெண்டால் கற்றுக் கொடுத்தவர் ஆசிரியர் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார். இன்று ஆசிரியர் என்பது கல்விக் கூடங்களில் கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் முறைசார் தொழில் வாண்மையினரைக் குறிக்கும் ஒரு சொல்லாகவே பொருள் கொள்ளப்படுகிறது. ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், "நான் ஓர் ஆசிரியராகவே இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டுள்ளேன்" என்று கூறி, மொத்த ஆசிரியர் சமூகத்தையுமே கண்ணியப்படுத்தியிருக்கிறார்கள்.

மனிதனைப் படைத்து அவன் அறியாதவற்றைக் கற்றுக் கொடுத்ததாக இறைவன் குறிப்பிடுகிறான். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு எல்லாவற்றினதும் பெயர் களைக் கற்றுக் கொடுத்ததாகவும் அல்லாஹ் குறிப்பிடுகிறான். அந்த வகையில், அறிவு என்பதும் அதனைக் கற்றுக் கொடுத்தல் என்பதும் மகத்துவமிக்க பணிகள் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.

ஒரு மாணவனின் வாழ்வில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் ஒருவர் ஆசிரியர்தான். பிள்ளைகளுக்குப் பெற்றோர் எப்படியோ அப்படியே மாணவர்களுக்கு ஆசிரியரும் என் றைக்கும் மாறாத தொடர்புடையவராவார். கால மாற்றத்தால் வயது மாற்றத்தினால் இந்த உறவு மங்கிப் போவதில்லை. கிரேக்க மன்னர் மகா அலெக்ஸாண்டருக்கு ஜூலியஸ் சீஸர் என்ற ஆண் குழந்தை பிறந்தபோது அன்றைய மாபெரும் அறிஞர் சோக்கிரடீஸ், மன்னருக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பி தனது மகிழ்ச்சியை தெரிவித்தார். அதற்கு பதில் அனுப்பிய மன்னர் அலெக்ஸான்டர் "எனக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது என்ற மகிழ்ச்சியைவிட அது உங்களைப் போன்ற பேரறிஞர்கள் வாழும் காலத்தில் பிறந்துள்ளமை குறித்து இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்" என்று குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமே இல்லை. ஏன் அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்? ஒக்டோபர் ஐந்தாம் திகதி வாழ்த்துக் கூறிவிட்டால் அவர்களுக்கு அந்த கௌரவம் கிடைத்து விடுமா? தனது ஆற்றல், அறிவு, இளமை, நேரம் அத்தனையையும் தன்னிடம் கல்வி கற்ற மாணவர்களுக்காகவே செலவளிக்கும் ஒருவர், தனது மாணவன் வாழ்வில் சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பும் ஒருவர், தன்னிடம் கல்வி கற்பவர் உலத்தாரின் அன்புக்கு ஆளாகி இறைவனின் அருளுக்கும் உரித்துடையவராக வர வேண்டும் என்ற பிரார்த்தனையோடு கற்பிக்கும் போது, அவரை ஒரு மாணவர் தந்தையின் இடத்தில் வைத்து மதிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நினைத்துப் பார்க்க முடியும்.

தனக்கும் தனது தாய் தந்தையருக்கும் அடுத்ததாக தனது ஆசிரியர்களுக்காக இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும் என்று கற்பிக்கும் மார்க்கம் இஸ்லாம். அவ்வா றெனில், ஆசிரியர் தினத்தில் மட்டுமன்றி எந்நாளும் எப்பொழுதும் ஆசிரியரின் நலனுக்காக அவரின் மறுமை வாழ்க்கைக்காக பிரார்த்திப்பது மாணவரின் கடமையல்லவா?

ஆனால், அத்தகைய பிரார்த்தனைகள், கௌரவித்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதி படைத்த ஆசிரியர்களாக எத்தனை பேர் இருக்கின்றனர் என்ற கேள்வியையும் நமக் குள்ளே கேட்டுப் பார்க்க வேண்டும். கற்பிப்பது ஒன்றைத் தவிர மற்றெல்லா வேலை களையும் செய்யும் ஆசிரியர்களும் இருக்கவே செய்கின்றனர். ஆசிரியர்களை மதிக்கும், கௌரவிக்கும் மாணவர்களை எதிர்பார்க்கும் அதேநேரம், அத்தகைய கௌரவித்தலை பெறத் தகுதியான ஆசிரியர்களையே சமூகம் எதிர்பார்க்கிறது.

ஒரு காலத்தில் மாணவர்களின், பெற்றோரின், சமூகத்தின், அரசாங்கத்தின் முழுமை யான நம்பிக்கையைப் பெற்றிருந்த ஆசிரியர் சமூகம் இன்று படிப்படியாக அதனை இழந்து வருகிறதா என்று யோசிக்க வேண்டியுள்ளது. பரிசுகள், விருதுகள், வீர முழக்கங்கள் மூலம் வழங்கும் பாராட்டுக்களை விட ஒரு மாணவரின் மனதில் நீங்கா இடம்பிடித்து இயல் பாகவே அவனது பிரார்த்தனைகளில் இடம்பெறும் ஒருவராக வருவதே உண்மையான கௌரவம் என்பதை ஆசிரியர்கள் புரிந்து கொள்ள முன்வருவார்களானால் ஆசிரியர் தினத்தின் நோக்கமும் நிச்சயம் நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பினைக்கு ஓர் உண்மைச் சம்பவம்



# அறிவைத் தேடிச் சென்று கற்போம்

**நபி** (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சிறிய தந்தையின் மகனான இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவை நேசிப்பவராகவும் அறிஞர்களை மதிப்பவராகவும் இருந்தார்கள். அதுமட்டுமல்லாமல் அறிவைத் தேடிச்சென்று கற்கும் வேட்கையுள்ளம் கொண்டவராகவும் தேடல் நிறைந்தவராகவும் காணப்பட்டார்கள்.

குறிப்பாக, அவர்கள் ஹதீஸ்களைத் தேடிச் சென்று கற்பதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். இவ்வாறு ஒருநாள் குறிப்பிட்டதொரு ஹதீஸ் ஒருவரிடமிருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்றார்கள். அப்போது வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது. இதனால் வீட்டு வாசற்கதவருகில் காத்திருந்தார்கள்.

வீட்டு சொந்தக்காரர் சிறிது நேரத்தின் பின் வீட்டின் கதவைத் திறந்தபோது தனது வீட்டு வாசற்கதவருகில் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹுஅன்ஹு) அவர்கள் இருப்பதைக் கண்டார். ஆச்சரியமடைந்த அவர்,

“நீங்கள் வந்த விடயம் என்ன?“ என்று வினவினார்.

அதற்கு இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்,

“உங்களிடம் ஒரு ஹதீஸ் இருப்பதாகக் கேள்விப்பட்டு அதனை அறிந்து கொள்வதற்காக வந்தேன்“ என்று கூறினார்கள்.

அதற்கவர், ''நான் வரும்வரை நீங்கள் ஏன் காத்திருந்தீர்கள்? கதவைத் தட்டி என்னை அழைத்திருக்கலாம்தானே! நீங்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சிறிய தந்தையின் மகனல்லவா? நீங்கள் அழைத்திருந்தால், நானே உங்களது வீட்டிற்கு வந்திருப்பேனே!“ என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் குடும்பத்தினர் மீது தான் வைத்திருந்த அன்பை, கண்ணியத்தை வெளிப்படுத்தினார்.

அதற்கு இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்:

“அறிவு எமது வீட்டைத்தேடி வரக்கூடாது:

நாம்தான் அறிவைத் தேடிச் செல்ல வேண்டும்”.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதுங்கித் தாக்கும் பயங்கர முதலை (Crocodile)

ஆலிப் அலி, இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி

**அண்மையில்** வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றின்படி உலகில் வாழும் மிகவும் ஆபத்தான உயிரினங்களின் வரிசையில் முதலையும் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. உண்மையில் முதலை மிகவும் பயங்கரமான, ஆபத்தானதொரு விலங்கு. இதனைக் கருவாக வைத்து நிறைய திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. இன்று சர்கஸ் காட்சியரங்குகளில் முதலைகளுடன் சாகசம் புரிந்து, பார்வையாளர்களை மயிர்கூச்செறிய வைப்பது வாடிக்கையாகிவிட்டுள்ளது.

பல்லி இனத்திலேயே (Lizard) மிகவும் பெரிய உயிரினம் இந்த முதலைதான். முதலை, கபரகொயா, உடும்பு, ஓணான், பல்லி என யாவும் ஒரே குடும்பமாகவே கருதப்படுகின்றன. இவை சுமார் ஐந்து மீட்டர்கள் வரை நீண்டு வளரக்கூடியன. பொதுவாக முதலைகள் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, அமெரிக்கா, தெற்காசியா போன்ற இடங்களில் அதிகமாக வாழ்கின்றன. இதுவரை 12 வகையான முதலை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முதலைகள் நீரிலும் நிலத்திலும் வாழும் இயல்பைக் கொண்டிருப்பதனால் அவை 'ஈரூடக வாழி' எனப்படுகின்றன. சிறிய குட்டையான நான்கு கால்களைக் கொண்டு அவை மெதுவாகவே தரையில் ஊர்ந்து செல்லும். ஆனால் நீரில் மிக வேகமாக அவற்றால் நீந்த முடியும். இதற்கேற்ற விதத்தில்தான் அல்லாஹ் இவற்றின் விரல்களுக்கிடையே வாத்துகளின் கால்களைப் போன்ற தோல்மடிப்புக்களை அமைத்துக் கொடுத்துள்ளான். அவ்வாறே நீந்துவதற்கு உதவியாகவும் எதிரிகளை அல்லது இரைகளைத் தாக்கிப்பிடிப்பதற்கு இலகுவாகவும் நீண்டதொரு வாலையும் அமைத்துக் கொடுத்துள்ளான்.

முதலைகள் காடுகளில் உள்ள குளங்களிலும் பாழடைந்த நீர் நிலைகளிலும் ஆறுகளிலும்தான் அதிகமாக வாழ்கின்றன. சேற்று நிற மங்கலான நீர்நிலைகளில் தமது கண்களையும் மூக்கின் மூச்சுத் துவாரத்தையும் மாத்திரம் நீர்ப்பரப்புக்கு மேலால் வைத்து சுவாசித்துக்கொண்டிருக்கும். இவ்வாறு அவை அமைதியாக இருப்பதை இலகுவில் எம்மாலோ பிற விலங்குகளாலோ இனங்கண்டு கொள்ள முடியாது. இதனை அறியாமல் அருகில் வரும் விலங்குகளை ஒரே பாய்ச்சலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்து பிடித்து இரையாக்கிக் கொள்ளும்.

இவற்றிற்கு அல்லாஹ் வழங்கியுள்ள மற்றுமோர் அற்புத அம்சம்தான் நீருக்கு அடியில் வெகுநேரத்திற்கு மூச்சுவிடாமல் இருக்க முடியுமான ஆற்றலாகும். நீரினுள் மூழ்கியதும் மூக்கின் இரு ஓரங்களிலும் அமைந்திருக்கும் சிறிய இரு அடைப்பான்கள் (Flaps) மூக்கினுள் நீர் உட்புகாதவாறு இறுக அடைத்துக் கொள்ளும். நீரின் ஆழத்தில் வைத்து இரையைப் பற்றினாலும் நீர் உட்புகாதவாறு இரையை மட்டும் விழுங்கக் கூடிய அமைப்பையும் அல்லாஹ்வே இவற்றுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளான்.

முதலைகளின் தோல், மட்டைபோன்று மிகக் கடினமான சொரசொரப்பான தன்மை கொண்டது. ஆனால் வயிற்றுப் பகுதி மிகவும் மென்மையாக இருக்கும். அத்தோடு கூச்ச சுபாவமும் கூடியது. ஒருவேளை முதலையிடம் யாரும் சிக்கிக் கொண்டால் அவர் முதலையின் கண்களைக் காயப்படுத்தியோ அல்லது அதன் அடிவயிற்றைப் பலமாகக் கூச்சம் காட்டினாலோ அதனிடமிருந்து தப்பிக் கொள்ள முடியும்.

மீன்கள், பறவைகள், ஆமைகள் என பலதையும் அவை உணவாகக் கொள்கின்றன. சில சமயங்களில் இவை நீரருந்த கரையை நோக்கிவரும் மான்கள், எருதுகள், வரிக்குதிரைகளைக் கூட நீருக்கடியில் பதுங்கியிருந்து திடீரெனப் பாய்ந்து பிடித்துக் கொள்கின்றன. சிறு படகுகளையும் தாக்கி அவற்றில் பிரயாணிப்பவர்களையும் கொன்று தின்றுவிடும் அபாயகரமான உயிரினம்தான் இந்த முதலைகள். சிறிய இரைகளை உடனே விழுங்கி விட்டாலும் பெரிய இரைகளைப் பொறுத்தவரை அவற்றைக் கொன்று இழுத்துச்சென்று எங்காவது ஒரு பெரிய வளையினுள் அழுக வைக்கும். அது அழுகியதன் பின்புதான் உணவாக்கிக் கொள்ளும்.

முதலையின் பற்கள் மிகவும் கூர்மையானவை. இரையைப் பற்களால் பற்றிய உடனே மிகவேகமாக சக்கரம்போன்று நிலத்தில் புரள ஆரம்பிக்கும். அதனால் இரையின் ஒரு பகுதி பிய்ந்து முதலையின் வாயினுள் சென்றுவிடும். முதலைகளிடம் உள்ள விஷேட அம்சம்தான் அவற்றுக்கு மற்ற விலங்குகளைப் போன்று நாக்கு காணப்படுவதில்லை. நாக்கின்றியே அல்லாஹ் அவ்விலங்கைப் படைத்துள்ளான். எனவே உணவை வாயில் வைத்து புரட்டிப் புரட்டி உண்ணாமல் உடனே லபக் என்று விழுங்கிவிடும்.

பெண் முதலை முட்டையிடும் பருவத்தை அடைந்ததும் கரையை அடைந்து சூரிய ஒளி படக்கூடிய மணற்பரப்பில் சற்று ஆழமான குழியைத் தோண்டுகின்றது. பின்பு அதற்குள் ஒரே தடவையில் சுமார் 40 முட்டைகளை இடுகின்றது. முட்டைகள் கோழியின் முட்டையினளவை ஒத்திருக்கும். பின்பு அக்குழியை மூடிவிட்டு அவை சென்று விடுகின்றன. சூரிய உஷ்ணத்தில் முட்டையினுள் இருக்கும் குஞ்சுகள் படிப்படியாக வளர்கின்றன. வேறு சில முதலைகள் முட்டையிட்டுவிட்டு அவ்வளையினருகே குஞ்சுகள் வெளிவரும்வரை காத்திருந்து பாதுகாப்பை வழங்குகின்றன. குஞ்சுககள் வெளிவந்ததும் அவற்றைத் தமது வாயில் சுமந்துசென்று நீர்நிலைகளில் பாதுகாப்பான ஓர் இடத்தில் சேர்க்கின்றன.

முட்டையினுள் இருக்கும் குஞ்சு முதலைகளின் மூக்கின் இருபக்கத்திலும் இரண்டு கூரான பற்கள் காணப்படுகின்றன. இதனைப் பயன்படுத்தியே முட்டையின் மேலோட்டை அவை உடைத்துக் கொண்டு வெளியேறுகின்றன. வெ ளியே வந்து இரண்டு நாட்களில் தானாகவே அப்பற்கள் வீழ்ந்துவிடும். இவ்வமைப்பு அக்குஞ்சுகள் தாமாகவே ஏற்படுத்திக் கொண்டதோ அல்லது முட்டையிடும்போதே தாய் முதலை அமைத்துக் கொடுத்ததோ அல்லது இயற்கைத் தேர்வின்படி உருவானதோ அல்ல. மாறாக சர்வமும் அறிந்த வல்லவன் அல்லாஹ் அவற்றின் தேவைக்காகவவே படைத்ததுதான் அவ்வமைப்புகள் யாவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் அகரம்

## அறிஞர்களின் மொழிகள்

1. **கல்வி எனும் செடியின் வேர் வேண்டுமானால் கசப்பாகத் தோன்றலாம். ஆனால் அதன் பழம் இனிக்கும்.** - அரிஸ்டோட்டில்

2. **உழைப்பின்றி உண்பவர்கள் திருடர்கள்.** - காந்தி அடிகள்

3. **நல்ல புத்தகம் நல்ல நண்பன்.** - ஜவஹர்லால் நேரு

4. **மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்.** - அறிஞர் அண்ணா

5. **தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இம் மூன்றும் தான் ஒருவனின் வெற்றிக்கு காரணமாக இருக்கின்றன.** - விவேகானந்தர்

ஹ. இல்ஹாம்
தரம்- 09
தி/ சதாம் வித்தியாலயம்,
மூதூர்

## வானியல் அறிஞர்கள்

01. "புவி தட்டை வடிவமானது அல்ல, புவி கோள வடிவானது" என முதலில் கூறியவர்-
**பண்டைய கிரேக்க வானியல் அறிஞரான பைதகரஸ் (கி.மு. 580-500)**

02. "சந்திர கிரகணத்தின் போது சந்திரனின் மீது புவியின் நிழல் வட்டவடிவில் விழுவதால் புவி கோள வடிவானது" எனக் கூறியவர்-
**அரிஸ்டோட்டில் (கி.மு. 384-222)**

03. "சூரியனே அகிலத்தின் மையம்" எனக் கூறியவர்-
**பண்டைய கிரேக்க வானியல் அறிஞரான அரிஸ்டாகஸ் (கி.மு. 280-264)**

04. புவியினதும், வான் பொருட்களின தும் வரைபடத்தை முதலில் வரைந் தவர்-
**குளோபியசு தொலமி (கி.பி. 100-98)**

05. சூரிய நாட்காட்டியை முதலில் உரு வாக்கியோர்-
**அரேபிய வானியல் அறிஞர்கள் (கி.பி.7ஆம் நூற்றாண்டு)**

வை.எல். ஹஸ்ஸானா பர்வின்
தரம்- 09
கெகுணகொல்ல தேசிய பாடசாலை



## உலகின் மிகச் சாய்வான வீதி

நியூஸிலாந்தின் 'டனடின்' நகரின் 'போல்ட்வின்' வீதியே உலகின் மிகச் சரிவான வீதி. 200 மீற்றர் நீளமான இப்பாதையில் பயணிக்கையில் ஒவ்வொரு 2.86 மீற்றர் செல்லும்போதும் பாதையின் சாய்வு வீதம் 1 மீற்றர் ஆகும். அதாவது 2.86 மீற்றர் தூரம் என்றால் அது 1 மீற்றர் உயரம் செல்வற்கு சமன். கீழிருந்து பார்க்கும் போது செங்குத்தாகத் தெரியும் இவ்வீதியின் மேல் உச்சிவரை தினமும் நடந்தும் வாகனங்களிலும் அங்கு வசிப்பவர்கள் சென்று வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பெருஞ் சுவர்



கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் 16ஆம் நூற்றாண்டு வரை பல நூற்றாண்டுகளாகக் கட்டப்பட்ட சீனப் பெருஞ்சுவர் சீன மக்களால் 'பின்யின் சாங்செங்' என்றழைக்கப்படுகின்றது. இது சீன மொழியில் மிக நீண்ட மதில் என்று பொருள்படும்.

சீனாவின் தெற்குப் புறத்தை அந்நியர் படையெடுப்புகளில் இருந்து பாதுகாப்பதற்காக கட்டப்பட்டதே சீனப் பெருஞ்சுவர். சீனப் பெருஞ்சுவரைப் போன்ற பல்வேறு சுவர்கள் அதற்குப் பின்னரும் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றில் பிரபலம் பெற்றது கி.மு. 220க்கும் 200க்கும் இடையில் நிர்மாணிக்கப்பட்ட சுவர். இது மிங் சாம்ராஜ்யத்தில் தற்போதைய சுவருக்குத் தெற்காக அமைக்கப்பட்டுள்ளது. அச்சுவரில் சில பகுதிகளே தற்போது எஞ்சியுள்ளன.

சீனப் பெருஞ்சுவர் 'ஷன் ஷெய்குவான்' முதல் கிழக்கே 'லொப்பார்' வரை சுமார் 8700 கிலோமீற்றர் நீளம் கொண்டது. மிகவும் உயரமான பகுதியிலுள்ள மிங் சுவர் சுமார் ஒரு மில்லியன் படையினரால் காவல் காக்கப்பட்டது. இச்சுவர் நீண்ட காலமாகப் பலரால் கட்டப்பட்டு வந்தது. மண்ணினால் கட்டப்பட்ட பகுதிகளிலும் பார்க்க செங்கற்களும் கற்களும் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட பகுதிகள் வலுவானதாய் அமைந்திருந்தன.

மிங் சாம்ராஜ்யம் சீனப் பெருஞ்சுவரின் நிர்மாணத்திற்கு வழங்கிய பங்களிப்புகளே அதனை மேலும் வலுவுள்ள சுவராக ஆக்கியுள்ளன. அப்போது பீஜிங்கின் தலைநகராக இருந்த மிங்கில் காணப்பட்ட சுவர்கள் மிகவும் வலுவானவை.

குயிங் ஆட்சியில் சீனாவின் எல்லைகள் பெருஞ்சுவரையும் தாண்டி விரிவடைந்தன. எனவே இக்காலப் பகுதியில் இம்மதிலின் நிர்மாணமும் புனரமைப்பும் கைவிடப்பட்டன.

சீனப் பெருஞ்சுவரின் கன்சு மாகாணத்தில் அமைந்துள்ள பகுதி இன்னமும் 20 வருட காலப்பகுதிக்குள் அழிவடைந்து விடலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனப் பெருஞ் சுவரின் மேற்குப் பகுதி அதிகளவு மண்ணினாலும் களியினாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் அதுவும் அழிவடையும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளதாம்.

1994இல் விண்கலமொன்றில் இருந்து பிடிக்கப்பட்ட விம்பங்களில் பூமியில் சீனப் பெருஞ் சுவர் மாத்திரமே தென்பட்டதாம்.

உலகிலேயே மனிதனால் கட்டப்பட்ட மிகப் பிரமாண்டமான கட்டமாக வர்ணிக்கப்படும் சீனப் பெருஞ்சுவர் சந்திரனில் இருந்து பார்க்கும் போது மனித வெற்றுக் கண்ணுக்கு பூமியில் புலப்படும் ஒரே ஒரு கட்ட அமைப்பாகவும் கருதப்பட்டது. ஆனால் சீனப் பெருஞ்சுவர் பற்றிய The great wall china; from history to myth என்ற நூலை எழுதிய ஆதர் வோல்டிரன் என்பவர் சந்திரனில் இருந்து பார்க்கும்போது மனித வெற்றுக் கண்ணுக்கு சீனப் பெருஞ்சுவர் புலப்படும் என்பது வெறும் கற்பனையே என்கிறார். "அது செவ்வாயில் கால்வாய்கள் இருக்கலாம் என்ற நம்பிக்கைக்கு ஒப்பானது" எனக் கேலி செய்கின்றார். அதுபோல சந்திரனுக்கு சென்றதாகக் கூறப்படும் விண்வெளி வீரர்கள் எவரும் தமது கண்களுக்கு சீனப் பெருஞ்சுவர் தென்பட்டதாகவும் இதுவரை கூறவில்லை.

நீல் ஆம்ஸ்ரோங்கும் பூமியில் மனிதன் நிர்மாணித்த எவையும் தனது கண்களுக்கு சந்திரனில் இருந்து பார்க்கையில் தென்படவில்லை என்று கூறியிருக்கின்றார்.

எப். ஸம்ஹா மிர்சூக்
தரம்- 10
க/நளீம் ஹாஜியார் மகளில் கல்லூரி,
பேருவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக விருதுகள் சில

**நோபல் பரிசு:** இலக்கியம், மருத்துவம், பொருளாதாரம், சமாதானம், பௌதிகம், இரசாயனம் போன்ற துறைகளுக்கு செய்த சேவைக்காக வழங்கப்படும் பரிசு.

**புக்கர் பரிசு:** பிரித்தானிய நாட்டு இலக்கியப் பரிசு.

**ஞான பீடப் பரிசு:** இந்தியாவில் இலக்கியப் படைப்புகளுக்கு வழங்கப்படும் விருது.

**நேரு விருது:** சமாதான நோக்கங்களுக்கு சேவை செய்பவர்களுக்கு உலகளாவிய ரீதியில் வழங்கப்படும் விருது.

**புலிட்சர் விருது:** பத்திரிகைத் துறையில் சேவை செய்யும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் விருது.

எம். எஸ். சாஜிதா
தரம்- 11
அல்ஹுதா மு.வி.
ரம்புக்கந்தன

# உங்களுக்குத் தெரியுமா?

| | |
|---|---|
| முத்தமிழ்:- | இயல், இசை, நாடகம் |
| முக்கனி:- | மா, பலா, வாழை |
| முத்தொழில்:- | படைத்தல், காத்தல், அழித்தல் |
| முக்காலம்:- | இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் |
| முப்பால்:- | அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் |
| முப்பொறி:- | மனம், வாக்கு, காயம் |
| மும்முரசு:- | வீர முரசு, கொடை முரசு, மங்கள முரசு |
| மூவேந்தர்:- | சேரர், சோழர், பாண்டியர் |
| மூவிடம்:- | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| முப்படை:- | தரைப்படை, கடற்படை, வான்படை |

எம்.எப்.எப். சிபானா
07
க/வத்தேகெதர அஷ்ஷபா ம.ம.வி.

# நாடுகள் பற்றிய சில தகவல்கள்

1. வருடம் தோறும் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் நாடு- சுவிற்சர்லாந்து
2. வருடம் தோறும் பூமியில் புதைந்து வரும் நாடு - நெதர்லாந்து
3. உலக மக்கள் அமைதியாக வாழ்வ தற்கு மிகச் சிறந்த நாடு- நோர்வே
4. உலகில் தட்டையான சமதளமான நாடு- மாலைதீவு
5. உலகில் மிகப் பழைமையான பாராளுமன்றம் உள்ள நாடு- ஐஸ்லாந்து
6. கடல் மட்டத்திற்கு கீழே உள்ள நாடு- டென்மார்க்
7. பிளாஸ்ரிக் ரூபாய் நோட்டுக்களை அறிமுகப்படுத்திய நாடு- அவுஸ்திரேலியா
8. கண்ணாடித் தொழிலுக்குப் பெயர் பெற்ற நாடு- பெல்ஜியம்
9. உலகில் மின் தடை இல்லாத நாடு- குவைத்
10. பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கும் நாடு- இஸ்ரேல்
11. அதிக வானொலி நிலையங்களைக் கொண்ட நாடு- அமெரிக்கா

ஆ.லெ. ஆயிஷா ஸஹானி
தரம்- 8
மட்/ஹிழ்ரிய்யா வித்தியாலயம்
காத்தான்குடி

# சிந்திக்க சில வரிகள்

1. அன்பு உன் நெஞ்சில் இருந்தால் அழகு உன் முகத்தில் இருக்கும்.
2. இலட்சியம் இல்லாத மனிதனின் வாழ்வு ஆழ்கடலில் துடுப்பில்லாத படகு போன்றது.
3. சிக்கனமே வாழ்வை ஓட்டும் சக்கரம்; அதுவே உயர்வைத் தரும் ஆயுதம்.
4. பேசும் வார்த்தையை அளந்து பேசு! பேசிவிட்டு துன்பப்படுவது குடித்த நீரை வெளியே எடுப்பது போன்றதாகும்.
5. பெரும் பதவியில் இருந்தும் ஏழையைப் பார்க்காதவன் பெற்ற தாய்க்கு கருணை காட்டாதவன் போலாவான்.

- றபீக் பாதிமா ரஸானா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூ ஹானிம்

# அல்குர்ஆனின் உள்ளடக்கம்



**அன்பின் இனிய பிள்ளைகளே!**

**வாழும்** அற்புதம் அல்குர்ஆன் எனும் இத் தொடரில் அல்குர்ஆனை அதன் எதிர்பார்ப்புக்களோடு உங்களை தொடர்புபடுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அல்குர்ஆனின் கருத்துக்களும் சிந்தனைகளும் வழிகாட்டல்களும் புறக்கணிக்கப்பட்டுள்ள ஒரு சமூகச் சூழலில் நாம் வாழ்ந்து வருகின்றோம். இந்நிலை மாற்றப்பட்டு உயர்வான இலக்குகளை எமக்குப் போதித்துத் தரும் அல்லாஹ்வின் வாக்கான அல்குர்ஆனுடன் நெருங்கிய உறவை நாம் பேண வேண்டும். நாளை அல்குர்ஆனிய மனிதர்களாக நீங்கள் வாழ வேண்டும். அல்குர்ஆனிய சமூக உருவாக்கத்தின் பங்காளிகளாக நீங்கள் வாழ வேண்டும். அவ்வகையில் இப்பகுதியில் அல்குர்ஆனின் உள்ளடக்கத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

அல்குர்ஆன் அருளப்பட்டதன் நோக்கம் மனிதன் மனிதத்துவத்துடனும் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும் வாழ்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவதாகும். மனிதன் இவ்வுலக வாழ்வை அவனைப் படைத்த ரட்சகனுக்காக வாழ்ந்து இவ்வுலக வாழ்விலும் மறு உலக வாழ்விலும் ஈடேற்றம் பெற்றுக் கொள்வதற்கான நிறைவான வழிகாட்டல்களை வழங்குவதே அல்குர்ஆனின் இலக்காகும். அல்லாஹ் மனிதனுக்கு சுதந்திரத்தையும் கட்டுப்பாட்டையும் வழங்கி மனிதன் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள அருளான பகுத்தறிவைப் பயன்படுத்தி சுதந்திரம், கட்டுப்பாடு என்ற இரண்டு அம்சங்களிலும் சமநிலை பேணி வாழ வேண்டும்.

எனினும், மனிதன் சிலபோது சுதந்திரத்தை மட்டுமே விரும்புகின்றான. அனுபவிக்கின்றான். கட்டுப்பாட்டை உடைத்து விடுகின்றான். இன்னும் சில சந்தர்ப்பங்களில் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துகின்றான். சுதந்திரத்தை மறுத்து விடுகின்றான். இது மனிதனை மனித நிலையிலிருந்து தூரமாக்கி அவனை மிருக நிலைக்கு இட்டுச் செல்கின்றது. இவை இவ்வுலக வாழ்வின் இயங்கு நிலைக்கும் மனிதனின் மறு உலக வாழ்வின் ஈடேற்றத்திற்கும் ஆபத்தானதாகும்.

மனிதனில் காணப்படும் இம்மாறுபட்ட நிலையை ஒழுங்குபடுத்தவே அல்லாஹ் வஹி எனும் வழிமுறை மூலம் மனித இனத்தோடு தொடர்பு கொண்டு வேதங்களையும் ரஸூல்மார்களையும் அனுப்பி வழிகாட்டலை வழங்கினான். அத்தொடரின் இறுதியாகவே அல்குர்ஆன் முழு மனித சமூகத்திற்கும் அருளாக வழங்கப்பட்டது.

மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி. தனது பிரதிநிதித்துவப் பணியை, கடமையை மனிதன் சரியாக நிறைவேற்ற வேண்டுமெனின், அவன் அல்லாஹ் பற்றியும் தான் வாழும் பிரபஞ்சம் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியவனாக உள்ளான். எனவே, அல்குர்ஆன் அல்லாஹ் பற்றியும் பிரபஞ்சம் பற்றியும் மிகத் தெளிவான, ஆழமான, உறுதியான கருத்தை பேசுவதை நாம் பார்க்கலாம். அல்லாஹ்வை 'இலாஹ்' ஆக ஏற்க வேண்டும். தௌஹீதையும் அதனை மிகத் தெளிவாக விளக்குகின்ற றிஸாலத்தையும் (தூதுத்துவம்) இம்மை வாழ்வின் செயற்பாட்டுக்கான பிரதிபலனை அனுபவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மறுமை வாழ்வு பற்றியும் அது தனது அடிப்படை போதனைகளைப் புரிகின்றது.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து



## பாவங்களுக்கு பரிகாரம் தேடுவோம்

عَنْ أَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ :سَمِعْتُ (رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ) يَقُوْلُ:
((وَاللهِ إِنِّيْ لأَسْتَغْفِرُ اللهَ وَأَتُوْبُ إِلَيْهِ فِيْ الْيَوْمِ أَكْثَرَ مِنْ سَبْعِيْنَ مَرَّةً)) رَوَاهُ الْبُخَارِيْ.

**அபூ ஹுரைறா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நான் செவிமடுத்துள்ளேன்: "நிச்சயமாக நான் ஒவ்வொரு நாளும் 70 தடவைகளுக்கு மேல் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்." (நூல்: அல்புகாரி)**

**தௌபா** என்றால் பாவமீட்சி பெறல் என்று பொருளாகும். அதாவது, ஒரு மனிதன் அவன் செய்த அனைத்துப் பாவங்களையும் விட்டு விலகி தான் செய்த தவறுகளுக்காக வருந்தி இனிமேல் மீண்டும் அது போன்ற பாவங்களை செய்யாமல் இருப்பதாகும். இன்றைய நவீன உலகில் மனிதன் நவீனமாக வாழவிரும்புவதால் அவனை அறிந்தோ அறியாமலோ அவனுடைய சூழல் அவன் தவறு செய்வதற்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்கிறது.

அதுமாத்திரமின்றி ஒரு மனிதனது உள்ளம் தூய்மையாக இருப்பதற்கு மிகப் பெரும் ஆயுதமாக இந்த தௌபா திகழ்கிறது. உதாரணமாக இருவர் நண்பர்களாக இருக்கின்ற போது ஒருவர் மற்றவரைப் பற்றி வேண்டுமென்றோ அல்லது தவறுதலாகவோ தவறாக கதைக்கின்ற போது அவன் கோபப்பட்டு, மன்னிப்புக் கேட்டும் மன்னிக்காமல், சந்தர்ப்பம் கிடைக்கின்ற போது பழிவாங்கும் நோக்குடன் இருக்கின்றான். ஆனால் அல்லாஹ் தனது அடியார்கள் செய்த தவறை மன்னிக்க கூடியவனாக காணப்படுகிறான். ஓர் அடியான் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்துவிட்டு பிறகு அவன் தனது தவறை உணர்ந்து அல்லாஹ்விடத்தில் மன்னிப்புக் கேட்கும்போது அல்லாஹ் அவனது தௌபாவை ஏற்றுக் கொள்கிறான்.

இது பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்;

**"மேற்கிலிருந்து சூரியன் உதயமாகும் வரை பகலில் தவறிழைத்தவன் தௌபாச் செய்து மீள்வதற்காக இரவிலும், இரவில் தவறிழைத்தவன் தௌபாச் செய்து மீள்வதற்காக பகலிலும் அல்லாஹ் தன் கரத்தை விரிக்கிறான். (தௌபாவை ஏற்றுக் கொள்கிறான்)"**

**(நூல்: முஸ்லிம்)**

ஓர் அடியான் அல்குர்ஆனையும் அல்ஹதீஸையும் பின்பற்றி வாழ்ந்தால் இவ்வாறான தவறுகளை செய்ய மாட்டான். ஒரு முஃமின் அல்லாஹ் விடத்தில் தான் செய்த தவறுக்காக எந்நேரமும் மன்றாடிக் கொண்டேயிருப்பான்.

தௌபாச் செய்வதற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன. அவற்றைக் கடைப்பிடித்து அவன் தௌபாச் செய்ய வேண்டும்.

01. தான் செய்த பாவத்தை விட்டுவிடவேண்டும். (ஓர் அடியானுக்கு தவறிழைத்தால் அந்த அடியானிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. செய்த தவறை உணர்ந்து வருந்தி அழ வேண்டும்.

03. இனிமேல் இந்த தவறை செய்ய மாட்டேன் என அல்லாஹ்விடத்தில் உடன்படிக்கை செய்ய வேண்டும்.

எம்மில் அதிகமானோர் "எவ்வளவோ தவறுகளை, செய்து விட்டோம் இனி தௌபா செய்தால் ஏற்றுக் கொள்ளப்படப் போகிறதா?" என மனச் சோர்வடைகின்றனர். இது ஷைத்தானின் எண்ணமாகும். நூறு கொலைகள் செய்த ஒரு மனிதன் தௌபாவை நாடி சென்று கொண்டிருக்கும் போது இடையில் மரணித்து சுவர்க்கம் செல்லவில்லையா?

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:

**"நிச்சயமாக உங்களில் ஒருவர் அவருக்கும் சுவர்க்கத்திற்குமிடையில் ஒரு முழம் அளவு தூரம் இருக்கும் வரை சுவர்க்கவாதியுடைய செயலை செய்து கொண்டிருப்பார். எனினும் விதி அவரை முந்தி விடும். அதனால் அவர் நரகவாசிகளின் அமலை செய்து நரகம் போய்விடுவார். மேலும் நிச்சயமாக உங்களில் ஒருவர் அவருக்கும் நரகத்திற்குமிடையில் ஒரு முழம் அளவு தூரம் இருக்கும் வரை நரகவாசிகளின் அமலை செய்வார். எனினும் விதி அவரை முந்திவிடும். அதனால் அவர் சுவர்க்கம் சென்று விடுவார்". (நூல்: அல்புகாரி, முஸ்லிம்)**

எனவே, நிராசையடையாமல் மனத் தூய்மையோடு தௌபா செய்ய வேண்டும். குறிப்பாக நாம் விளங்க வேண்டிய விடயம் என்னவெனில், முன் பின் பாவம் மன்னிக்கப்பட்ட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே ஒரு நாளைக்கு எழுபது தடவைகளுக்கு மேல் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்கின்றார்கள் என்றால் நாம் ஒரு நாளைக்கு எத்தனை தடவைகள் பாவமன்னிப்பு கேட்டாலும் போதாது. எனவே இன்றிலிருந்து செய்த பாவங்களை களைந்து அல்லாஹ்விடத்தில் தௌபா செய்து குர்ஆனையும் ஹதீஸையும் பின்பற்றி வாழ முயல்வோமாக! ■

ச. நௌபியா
அந்நுஸ்ஹா இஸ்லாமிய பெண்கள் கலாபீடம்,
சம்மாந்துறை

## சித்திரப் போட்டியில் முதலாமிடம்

'மார்க்கா' நிறுவனத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் மூதூர் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜே. பாத்திமா ஸப்னா தேசிய ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். வெற்றி பெற்ற மாணவியையும் பயிற்சி வழங்கிய ஆசிரியர் சமீம் முஹம்மதையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் ஏ. நஜ்முதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய பாடசாலை அதிபர் கூறுகையில், "எமது கல்லூரியின் பெயரை தேசிய ரீதியில் பிரபல்யமடையச் செய்த மாணவிக்கும் பயிற்சி வழங்கிய ஆசிரியருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் மாணவர்களின் திறமைகளை ஆசிரியர்கள் இனங்கண்டு அவர்களது ஆளுமையையும் ஆற்றலையும் வளர்க்க முன்வர வேண்டும் என தெரிவித்தார்.

தகவல்: எச்.எம். ஹலால்தீன்

40ஆம் பக்கத் தொடர்ச்சி...

5ஆம் தர புலமைப்பரிசில் முன்னோடி

வினாப்பத்திரம் II

விடைகள்

| | | |
|---|---|---|
| 1. தந்தை | 2. தேன் | 3. காது |
| 4. சக்தி | 5. இழக்குது | |
| 6. வானம் நீல நிறம். | | |
| 7. ராதா அழுகிறாள் | | 8. 2 |
| 9. 3 | 10. 2 | 11. ரூபா 12.00 |
| 12. ரூபா 16.00 | 13. 2 | 14. 2 |
| 15. 2 | 16. 1 | 17. 1 |
| 18. 2 | 19. 2 | 20. 1 |
| 21. II | 22. I | 23. II |
| 24. III | 25. II | |
| 26. எலுமிச்சம் பழம் | | |
| 27. பொழுது போக்கு | | |
| 28. கோழி | | |
| 29. 2 | 30. 1 | 31. 2 |
| 32. 2 | 33. 1 | 34. 1 |
| 35. 2 | 36. 3 | 37. 1 |
| 38. 2 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

**10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது**

ஆசிரியர்: நஸ்ரா நிஸாம்தீன்

## புணரியல்

இத்தொடரில் 'புணரியல்' எனும் புதிய அலகை நோக்குவோம்.

சொற்களின் பிரயோகத்தின் போது சேர்த்தெழுதும் இடங்களிலும் பிரித்தெழுதும் இடங்களிலும் எமது விருப்பில் சொற்களை ஆக்க முடியாது. அதற்கு இலக்கண விதிகள் பற்றிய அறிவு இருக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் 'புணரியல்' பற்றிய ஓரளவு விளக்கத்தை இப்பகுதியில் பெறுவோம். அவை தரம் 10, 11 மாணவர்களுக்கு போதுமானவை என நம்புகிறோம்.

1. 'புணர்ச்சி' எத்தனை வகைப்படும்?

இரண்டு வகைப்படும். அவை:

1. இயல்புப் புணர்ச்சி 2. விகாரப் புணர்ச்சி

02. 'புணரியல்' எத்தனை வகைப்படும்?

இரண்டு வகைப்படும். அவை:

1. வேற்றுமைப் புணர்ச்சி 2. அல்வழிப் புணர்ச்சி

03. 'இயல்புப் புணர்ச்சி'க்கு இரு உதாரணங்கள் தருக.

அலைகடல் ⟶ (அலை + கடல்)

பேறுயாது ⟶ (பேறு + யாது)

04. விகாரப் புணர்ச்சிக்கு உதாரணங்கள் தருக.

மரவேர் ⟶ மரம் + வேர்

பலாச் சுளை ⟶ பலா + சுளை

காற்சங்கலி ⟶ கால் + சங்கிலி

05. விகாரப் புணர்ச்சியின் வகைகள் எவை?

1. கெடுதல் 2. தோன்றல் 3. திரிதல்

06. ஆடு + கால் என்பதன் புணர்ச்சியை எழுதுக.

ஆடு + கால் ⟶ ஆட்டுக்கால்,

(ஆட்டினது கால் என்பதால் வேற்றுமைப் புணர்ச்சி)

ஆடு + கால் ⟶ ஆடுகால்

(ஆடியகால், ஆடுகின்றகால், ஆடும்கால் போன்றன அல்வழிப் புணர்ச்சி)

07. புணர்ச்சி வகைகளை எடுத்துக்காட்டுடன் தருக.

1. உயிர் முன் உயிர் வருதல்.

பலா + இலை ⟶ பலாவிலை

(ஆ) (இ)

2. உயிர் முன் மெய்

வாழை + பழம் ⟶ வாழைப்பழம்

(ஐ) (ப்)

3. மெய் முன் உயிர்

மலர் + இதழ் ⟶ மலரிதழ்

(ர்) (இ)

4. மெய் முன் மெய்

கல் + குகை ⟶ கற்குகை

(ல்) (க்)

8. நிலை மொழி, வருமொழி என்பது என்ன?

சொற்புணர்ச்சியில் முதலில் வருவது நிலைமொழி. வந்து சேர்வது வருமொழி.

(எ- டு) கல் + குகை

| நிலைமொழி | வருமொழி |
|---|---|



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலுள்ள வினாக்களுக்கேற்ப தொகுத்து நோக்குவோம்.

### 1. புணர்ச்சி

- இயல்புப் புணர்ச்சி
  - (வேல் + விழி) வேல்விழி
- விகாரப் புணர்ச்சி
  - திரிதல் விகாரம் → (கடல் + கரை) கடற்கரை ('ல்' 'ற்' ஆக திரிதல்)
  - தோன்றல் விகாரம் → (நிலா + சோறு) நிலாச்சோறு ('ச்' தோன்றியுள்ளது)
  - கெடுதல் விகாரம் → (மரம் + வேர்) மரவேர் ('ம்' மறைந்து விடல்)

### 2. புணர்ச்சி (புணரியல்)

- வேற்றுமைப் புணர்ச்சி → என்கை, கல்லெறிந்தான்
- அல்வழிப் புணர்ச்சி → விடிய விடிய, கார் மேகம்

(தொடரும்)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2010 ஆகஸ்ட்

இவ்வருடம் ஆகஸ்ட் 22ஆம் திகதி நடைபெற்ற தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் 313,450 மாணவர்கள் தோற்றினர். நாடுபூராகவும் உள்ள 2,744 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற்றது. இத்தேர்வின்போது சுமார் 31,000 மாணவர்கள் நாட்டிலுள்ள பிரபல்யமான பாடசாலைகளில் கல்வியைத் தொடர்வதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

100 புள்ளிகளைக் கொண்ட இரு வினாப் பத்திரங்களைக் கொண்டே மேற்படி பரீட்சை நடைபெற்றது. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வரலாற்றில், முதல் தடவையாக பரீட்சையின்போது 70 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டது. அதன்படி பரீட்சைக்கு தோற்றியோரில் 266,500 மாணவர்கள் 70க்கு மேல் புள்ளிகளைப் பெற்று சான்றிதழைப் பெற்றுக் கொள்ள தகுதிபெற்றுள்ளதுடன் சுமார் 47,000 மாணவர்கள் 70க்கும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இதன்படி 14.99 வீதமானோர் சித்திபெறவில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் முஹம்மத் ஆதிபுக்கு அகரம் தனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறது. இவர் புத்தளம் அப்துல் கரீம்-ரபீனா ஆகியோரின் புதல்வரான இவர், நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலத்தில் கல்வி கற்று 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தார்.

**"ஒரு நல்ல ஆசிரியர் தன்னையே அர்ப்பணித்து அறிவொளி வீசி வாழ்வுக்கு வழிகாட்டும் மெழுகுதிரி போன்றவர்."**



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொதுநலவாய விளையாட்டு- 2010










**இம்மாதம்** 3ம் திகதி முதல் 14ம் திகதி வரை இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் பொது நலவாய விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன. இந்தியாவில் பொதுநலவாய விளையாட்டுக்கள் நடைபெறுவது இதுவே முதற்தடவையும் ஆசியா வில் நடைபெறுவது இரண்டாவது தடவையா கும். ஆசியாவில் முதற்தடவையாக 1998ம் ஆண்டு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூ ரில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை இதன் ஆரம்ப நிகழ்வுகள் புதுடில்லி ஜவஹர்லால் நேரு மைதானத்தில் வெகுவிமரிசையாக ஆரம்பிக்கப்பட்டன. ஒவ் வொரு நான்கு வருடங்களுக்கு ஒரு தடவையும் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிக ளுக்கு இம்முறை 1.6பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளை நடத்துவதற்கு இந்தியா தன்னைத் தயார்படுத்தியபோது அது பல சவால்களை எதிர்கொண்டு சர்வதேச ஊடகங்க ளின் கவனயீர்ப்பைப் பெற்றுக் கொண்டது. வீரர்களுக்கு என அமைக்கப்பட்ட ''விளை யாட்டுக் கிராமம்'' பல சிக்கல்களுக்கு உட்பட் டது. அதுமாத்திரமன்றி அங்கு நிலவும் மோச மான காலநிலை, பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்காகக் கட்டப்பட்ட பாலம் இடிந்து விழுந்தமை, நேரகாலத்தோடு தயார் படுத்தல்கள் முடிவடையாமை என்பன காரண மாக பல வீரர்கள் போட்டியில் பங்கு கொள் ளாது விலகப்போவதாக அறிவித்தனர். ஆனா லும் எந்தவொரு நாடும் அதிலிருந்து விலகவோ அல்லது போட்டித் திகதி தாமதப்படுத்தப் படவோ இல்லை. ஏலவே திட்டமிட்டபடியே நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

**10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது**

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

**வினாக்கள்**

01. மானிய முறை என்றால் என்ன?

02. மானிய முறை சமூகத்தில் காணப்பட்ட நான்கு பிரிவுகளையும் தருக.

03. மானிய முறை வீழ்ச்சியடைந்தமைக்கு வழிவகுத்த காரணிகள் இரண்டை விளக்குக.

04. மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டை விளக்குக.

**விடைகள்**

01. மன்னன் தொடக்கம் அடிமட்டத்திலிருந்து வரும் பிரஜை வரையில் நிலத்தை அனுபவித்து வருவது தொடர்பாக நிறைவேற்றி வைக்கும் பொறுப்புகளுடன் இணைந்த சமூக ஒழுங்கே மானிய முறையாகும்.

02. I. மதகுருமார் II. பிரபுக்கள்

III. நிலத்தை சொந்தமாக வைத்திருக்கும் சாதாரண மக்கள்

IV. நிலமானிய சேவகர்கள்

**03. I. நாடுகாண் பயணங்கள்**

மானிய முறை சமுதாயம் ஐரோப்பாவில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு தொடக்கம் 15ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது. இதனை அறியாமைக் காலம் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இக்காலத்தில் மக்கள் வெளி உலகத் தொடர்பு இல்லாமல் தமது கிராமத்துக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். நாடுகாண் பயணங்கள் ஊடாக பிற நாடுகளுக்கான தொடர்புகள் ஏற்பட்டன. இந்தப் பயணங்கள் மக்களது சிந்தனையிலும் மாற்றத்தை ஏற்படுத்தின. மக்கள் பிற நாடுகள் பற்றியும் பிற மக்களது வாழ்க்கை பற்றியும் அறிந்தமையால் மானிய முறை வீழ்ச்சியடைந்தது. கொலம்பஸ் மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் அமெரிக்கோ வெஸ்புன்சி வட அமெரிக்காவுக்கும் பாத்லமியூ டயஸ் புயல் முனைக்கும் கடற்பயணங்களை மேற்கொண்டனர். வாஸ்கொடகாமா போர்த்துக்கல்லின் தலைநகரான லிஸ்பனில் இருந்து புறப்பட்டு இந்தியாவின் கள்ளிக் கோட்டைத் துறைமுகத்தை 1498இல் வந்தடைந்தார்.

**II. சமய சீர்திருத்தம்**

மானிய முறை நிலவிய காலத்தில் பாப்பரசர்களும் கத்தோலிக்க திருச்சபையும் அதிகமான அதிகாரங்களைக் கொண்டிருந்தன. கத்தோலிக்க திருச்சபை அரசியலிலும் சமூகத்திலும் அதிக செல்வாக்கைக் கொண்டிருந்தது. சமய சீர்திருத்தவாதிகள் பாப்பரசருக்கும் திருச்சபைக்கும் எதிரான கருத்துக்களை முன்வைத்தமையால் முதல் தடவையாக மக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். இதனால் மானிய முறைக் கட்டமைப்புகள் சிதைவடைந்தன. சமய சீர்திருத்தத்தில் ஈடுபட்டவர்களுள் மாட்டின் லூதர் முக்கியமானவர். தேவாலயங்களுக்கு பணத்தை வழங்கினால் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற கருத்தை இவர் வன்மையாக எதிர்த்தார். மாட்டின் லூதர் தனது கருத்துக்கு சார்பாக 99 நியாயங்களைக் கொண்ட ஒரு பிரகடனத்தை விற்றன் பேக் கதவில் ஒட்டினார். இவ்வாறு வளர்ச்சியடைந்த சமய சீர்திருத்தத்தின் விளைவாக மானிய முறைப் பண்புகள் இல்லாமல் போயின.

**04. I. கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப்பட்டமை**

ஒட்டோமன் துருக்கியர்கள் 1453இல் கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகராக விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றியமை, மறுமலர்ச்சி தோன்றுவதற்கான உடனடிக் காரணமாக அமைந்தது. இதனால் இந்நகரத்திற்கூடாக நடைபெற்ற தரைப் பாதை மூலமான வர்த்தகம் தடைப்பட்டது. கீழைத் தேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஐரோப்பியர் பெற்றுக்கொள்வது கடினமாக இருந்தது. இதனால் அப்பொருளைப் பெற்றுக்கொள்ள கடற் பயணங்களை மேற்கொண்டனர். மேலும் கொன்ஸ்தான் திநோபிளை துருக்கியர்கள் கைப்பற்றியதும் அங்கிருந்த அறிஞர்கள் தமது நூல்களை மேற்கு ஐரோப்பாவிற்கு கொண்டு சென்றனர். இந்த நூல்கள் அறிவு மலர்ச்சிக்கு காரணமாக அமைந்தன.

**II. விஞ்ஞான வளர்ச்சி**

விஞ்ஞானத்தில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. அறிவு நூல்கள் மக்களால் விரும்பிப் படிக்கப்பட்டதனாலும் கல்வி நிலையங்கள் அதிகரித்ததனாலும் புதிய உபகரணங்களும் புதிய நுட்பங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை மறுமலர்ச்சிக்கு காரணிகளாக அமைந்தன. சரசல் பஸல், மைக்கல் சர்வேஸஸ், வில்லியம் ஹாவே என்போர் மருத்துவத்துறை முன்னேறுவதற்கு பல கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டனர். ஐசக் நியூட்டன் இழுப்பு விசையைக் கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒக்டோபர் 05 ஆசிரியர் தினம்

**கௌரவிக்கப்பட** வேண்டியவர்கள்; கண்ணியப்படுத்தப்பட வேண்டியவர்கள். ஒக்டோபர் 05ஆம் திகதி ஒவ்வொரு மாணவனும் நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்து மதிக்கப் பளிக்கப்பட வேண்டியவர்கள். உலகம் கௌரவமான ஒரு தினத்தைக் கொண்டாடுகிறது.

ஆசிரியர்- மாணவர்கள் உறவுப் பாலம் உணர்வுபூர்வமானது மட்டுமல்ல, வித்தியாசமானதும் கூட. ஒரு நூலை எழுதிய நூலாசிரியர் அதனை வாசிக்கும் வாசக மாணவர்களுக்கு ஆசிரியராகிறார். வாசகன் மாணவனாகிறான். இந்த வகையில் எத்தனை எத்தனை முகம் தெரியாத ஆசிரிய, மாணவர்கள் இருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல உங்களது வாழ்க்கையில் நல்ல பாடங்கள் படித்துத் தந்த நல்ல ஆசான்களுள் பலரை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். தாய்-தந்தையர் உங்கள் முதல் ஆசிரியர்கள். உங்களுக்கு அவர்கள் கற்றுத் தந்தவை ஏராளம் ஏராளம்! உங்களுக்கு கதை சொன்ன பாட்டியாக இருக்கலாம், உங்களுக்குத் தெரியாத ஒன்றைக் கற்றுத் தந்த நண்பனாக இருக்கலாம் இவர்களும் வாழ்வில் மறக்க முடியாதவர்கள். ஆனால், இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் கற்பித்தல் சேவையை செய்யும் அந்த ஆசான்களுக்கு அவர்கள் சேவை கௌரவிப்பு நாளாக ஒக்டோபர் 05ஆம் திகதியை உலகம் கொண்டாடுகிறது.

அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்:

“எனக்கு யார் ஓர் எழுத்தைக் கற்றுத் தந்திருக்கிறாரோ அவருக்கு நான் அடிமையாக இருப்பேன்.”

கல்விக்கும் கற்பிப்போருக்கும் மரியாதை செய்பவன்தான் கல்வியைப் பெற முடியும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸஹாபாக்களுக்கு முழு வாழ்க்கையையும் கற்றுக் கொடுத்த பேராசான் ஆவார்கள். இந்தப் பணியை தொடர்ந்தவர்கள் பலர். இந்தவகையில் நாம் பல இமாம்களை, அறிஞர்களைப் பார்க்கிறோம். ஆனால், ஏனோ பலபோது நன்றி மறந்து விடுகிறோம். அத்தகைய ஆசான்களை நாம் ஞாபகிக்கத் தவறுகிறோம். அவர்களது பணிகளை புறக்கணித்து விடுகின்றோம்.

நாட்கள் நினைவு கூரப்படுவது மறுநாள் மறப்பதற்கல்ல. அவை ஒன்றின் குறியீடாகத்தான் பயன்படுகின்றன. ஆனால், இன்று கல்விக்கூடங்களில் ஆசிரியர்களை மதிக்காத நோய் பரவியுள்ளது. இதற்கு தீர்வு காணப்பட வேண்டும். அவர்கள் ஒன்றை ஞாபகத்தில் வைக்க வேண்டும். நானும் நாளை மதிக்கப்பட மாட்டேன். கவலையான விடயம் என்னவென்றால், இதற்கு பல நல்ல மாணவர்களும் பலியாகி விடுவதுதான். இதற்குக் காரணம் கெட்ட நட்பு; அதிலிருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

பாரம்பரியக் கல்வி முறையில் காணப்பட்ட பல்வேறு சிறப்புக்களை இந்த நவீன கல்வி இழந்திருக்கிறது. அதில் முக்கியமானதுதான் ஆசிரியர் - மாணவர் உறவு. எமது அறிஞர்கள் கல்வியைத் தேடிச் சென்று கற்றார்கள். கல்வியைப் பெற ஆசிரியரின் வீட்டு வாசற் கதவருகில் காத்திருந்தார்கள்.

இத்தகைய கல்விப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்தவர்கள்தான் எமது முன்னோர்கள். இவர்களால்தான் பல அறிவு முதுசங்கள் எமக்குக் கிடைத்தன. ஆகவே, மாணவர்களாகிய நாம் இத்தகைய அறிவுப் பாரம்பரியங்களை தொடர்ந்தும் பேணி நல்ல அறிவுப் பரம்பரையை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு என்றென்றும் மதிப்பளித்து, அவர்களை நினைவுகூர்ந்து அவர்களது நல்வாழ்வுக்கும் சேவைக்கும் துஆச் செய்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ENGLISH WITH Mrs. Wazeera Hassan B.A. (Hons)E.T.

## Do not skip breakfast!



Breakfast is the most important meal of the day. But it's also the most neglected. Researches show students who eat healthy breakfast score high on maths and other subjects. So do not skip breakfast.



Breakfast will make you healthier, happier & smarter!

## What is litter?




It is rubbish in the wrong place. If you throw sweet wrappers, fast food wrappers, soda cans, coffee cups, ice- cream cups and plastic or polethene bags into improper place, you are littering the place.

In Singapore, the act of spitting and littering in public places is an offence punishable with a fine.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# But what do we do in Sri Lanka?





Our streets, country side, water ways, drains and beaches are full of litter of all kinds. We are ruining the beauty of Sri Lanka which is considered to be the pearl of Indian ocean.

## Litter harms the environment in many ways



- It is a breeding ground for disease causing insects and rodents.
- Uncontrolled litter may block the drains causing inconvenience to people.
- Animals may get trapped or poisoned.
- It is a breeding ground for deadly mosquitoes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# For the Love Of the Nature

Nature is the most precious gift given to mankind. So it is man's duty to save it. But man is destroying it for his own selfish ends. He is cutting down the trees killing wildlife and Polluting the air with poisonous gases. Many fish have perished, the flowers have withered and bright colourful butterflies can hardly be seen any more. We are steadily moving towards the path of destruction.

Imagine a world where there will be no forests, only concrete jungles; no water, only acid rain; no birds and animals, only robots and no fresh air, only smoke –filled clouds. For the love of the nature, we have to preserve it. We must save our planet from being wiped out. Only when we succeed in doing we can we rejoice once again in the glory of the sunlight falling on mountain peaks, the rushing waters of melting glaciers, the fertile river banks and the fragrance of rose petals.

Faseeha Munawwar
Grade- 10, Baduriya Central College, Mawanella.

# *Late*





I woke up in the morning,
And looked at the clock.
It was seven- forty- five,
I got an electric shock!

I ran downstairs,
And saw my mother.
She was packing lunch,
For me and my brother.

I begged my mother and
Said "I can't go to school.
Because, getting very late
is against the rule!"

The prefects would keep
me standing,
Like they do to slaves in
Rome,
And with a whole lot of
effort,
She let me stay at home!



A. Roohy Farvin
Grade- 5
T/ Kuttikarachi Muslim Vidyalayam
Kinniya

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட வாழ்வில் அரபு மொழி

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மின் (நளீமி)

## السَّاعَةُ
## நேரம்

**நேரத்தை அரபில் சொல்வோம்.**

What is the time now?

كَمِ السَّاعَةُ الآنَ؟



السَّاعَةُ الْوَاحِدَةُ.

ஒரு மணி
(அஸ்ஸாஅதுல் வாஹிதா)



السَّاعَةُ الثَّانِيَةُ.

இரண்டு மணி
(அஸ்ஸாஅதுஸ் ஸானியா)



السَّاعَةُ الثَّالِثَةُ.

மூன்று மணி
(அஸ்ஸாஅதுஸ் ஸாலிஸா)



السَّاعَةُ الرَّابِعَةُ.

நான்கு மணி
(அஸ்ஸாஅதுர் ராபிஆ)



السَّاعَةُ الْخَامِسَةُ.

ஐந்து மணி
(அஸ்ஸாஅதுல் ஹாமிஸா)



السَّاعَةُ السَّادِسَةُ.

ஆறு மணி
(அஸ்ஸாஅதுஸ் ஸாதிஸா)



السَّاعَةُ السَّابِعَةُ.

ஏழு மணி
(அஸ்ஸாஅதுஸ் ஸாபிஆ)



السَّاعَةُ الثَّامِنَةُ.

எட்டு மணி
(அஸ்ஸாஅதுஸ் ஸாமினா)



السَّاعَةُ التَّاسِعَةُ.

ஒன்பது மணி
(அஸ்ஸாஅதுத் தாஸிஆஃ)



السَّاعَةُ الْعَاشِرَةُ.

பத்து மணி
(அஸ்ஸாஅதுல் ஆஷிரா)



السَّاعَةُ الْحَادِيَةَ عَشَرَةَ.

பதினொரு மணி
(அஸ்ஸாஅ துல் ஹாதியத அஷரா)

السَّاعَةُ الثَّانِيَةَ عَشَرَةَ.



பன்னிரெண்டு மணி
(அஸ்ஸா அதுஸ் ஸானியத அஷரா)



السَّاعَةُ الْحَادِيَةَ عَشَرَةَ وَنِصْفٌ.

*11 மணி 30 நிமிடங்கள்*
(அஸ்ஸா அதுல் ஹாதியத அஷரத வநிஸ்ப்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



السَّاعَةُ الرَّابِعَةُ وَعَشْرُ دَقَائِقَ.

4 மணி 10 நிமிடங்கள் (அஸ்ஸாஅதுர் ராபிஅது வஅஷ்ரு தகாஇக்)



السَّاعَةُ الثَّالِثَةُ وَرُبْعٌ.

3 1/4 மணி (அஸ்ஸாஅதுஸ் ஸாலிஸது வ ருப்ஃ)



السَّاعَةُالثَّانِيَةَ عَشْرَةَ وَنِصْفٌ.

12 மணி 30 நிமிடங்கள் (அஸ் ஸாஅதுஸ் ஸானியத அஷரத வநிஸ்ப்)



السَّاعَةُ الْوَاحِدَةُ وَنِصْفٌ.

1 1/2 மணி (அஸ்ஸாஅதுல் வாஹிதது வ நிஸ்ப்)



السَّاعَةُ الرَّابِعَةُ وَرُبْعٌ.

4 1/4 மணி (அஸ்ஸாஅதுர் ராபிஅது வ ருப்ஃ)



السَّاعَةُ الثَّالِثَةُ وَخَمْسُ دَقَائِقَ.

03 மணி 05 நிமிடங்கள் (அஸ் ஸாஅதுஸ் ஸாலிஸது வஹம்ஸு தகாஇக்)



السَّاعَةُ الثَّانِيَةُ وَنِصْفٌ.

2 1/2 மணி (அஸ்ஸாஅதுஸ் ஸானியது வ நிஸ்ப்)

**நாம் நேரத்தை 1/4,1/2, 3/4 எனப் பிரிப்பது போலவே அரபு மொழியில் 1/3, 2/3 எனவும் பிரித்துக் கூறுவர்.**

**உதாரணமாக......**

السَّاعَةُ الْخَامِسَةُ وَثُلُثٌ/

السَّاعَةُ الخَامِسَةُ وَعِشْرُوْنَ دَقِيْقَةً



5 மணி 20 நிமிடங்கள்

(அஸ்ஸாஅதுல் ஹாமிஸது வஸுலுஸ் (5 1/3),

(அஸ்ஸாஅதுல் ஹாமிஸது வ இஷ்ரூன தகீகா)

السَّاعَةُ الْوَاحِدَةُ إلاَّ خَمْسُ دَقَائِقَ



12 மணி 55 நிமிடங்கள்

(அஸ்ஸாஅதுல் வாஹிதது இல்லா ஹம்ஸு தகாஇக்)

(1 மணிக்கு 5 நிமிடங்கள்)

السَّاعَةُ السَّادِسَةُ وَأَرْبَعُوْنَ دَقِيْقَةً./

السَّاعَةُ السَّابِعَةُ إلاَّ ثُلُثٌ



6 மணி 40 நிமிடங்கள்

(அஸ்ஸாஅதுஸ் ஸாதிஸது வ அர்பஊன தகீகா / அஸ்ஸாஅதுஸ் ஸாபிஅது இல்லா ஸுலுஸ் )

السَّاعَةُ الثَّانِيَةُ إلاَّ عَشْرُ دَقَائِقِ



1 மணி 50 நிமிடங்கள்

(அஸ்ஸாஅதுஸ் ஸானியது இல்லா அஷ்ரு தகாஇக்)

(2 மணிக்கு 10 நிமிடங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| السَّاعَةُ الثَّانِيَةُ وَخَمْسٌ وَعِشْرُوْنَ دَقِيْقَةً.  2 மணி 25 நிமிடங்கள் (அஸ்ஸாஅதுஸ் ஸானியது வஹம்ஸுன் வஇஷ்ரூன தகீகா) | السَّاعَةُ الرَّابِعَةُ وَخَمْسٌ وَثَلاَثُوْنَ دَقِيْقَةً.  4 மணி 35 நிமிடங்கள் (அஸ்ஸாஅதுர் ராபிஅது வஹம்ஸுன் வஸலாஸூன தகீகா) |

| நிமிடம் (பன்மை) நிமிடங்கள் (தகீகதுன் (ப) தகாஇகு) | دَقِيْقَةٌ (ج) دَقَائِقُ |
|---|---|
| ஒரு நிமிடம் (அத்கீகதுல் வாஹிதது) | الدَّقِيْقَةُ الْوَاحِدَةُ. |
| 2 நிமிடங்கள் (அத்தகீகதானி அல்இஸ்னதானி) | الدَّقِيْقَتَانِ الإِثْنَتَانِ. |
| 3 நிமிடங்கள் (ஸலாஸு தகாஇக) | ثَلاَثُ دَقَائِقَ. |
| 4 நிமிடங்கள் (அர்பஉ தகாஇக) | أَرْبَعُ دَقَائِقَ. |
| 5 நிமிடங்கள் (ஹம்ஸு தகாஇக) | خَمْسُ دَقَائِقَ. |
| 6 நிமிடங்கள் (ஸித்து தகாஇக) | سِتُّ دَقَائِقَ. |
| 7 நிமிடங்கள் (ஸப்உ தகாஇக) | سَبْعُ دَقَائِقَ. |
| 8 நிமிடங்கள் (ஸமானி தகாஇக) | ثَمَانِ دَقَائِقَ. |
| 9 நிமிடங்கள் (திஸ்உ தகாஇக) | تِسْعُ دَقَائِقَ. |
| 10 நிமிடங்கள் (அஷ்ரு தகாஇக) | عَشْرُ دَقَائِقَ. |

**உரிய நேரத்தை அரபு மொழியில் சரியாகச் சொல்வதற்கு பின்வரும் பயிற்சியை செய்து பாருங்கள்.**

| | | |
|---|---|---|
|  8 மணி 1/2 மணித்தியாலம் ..................... |  7: 15 ............. |  4: 10 .............. |
|  1: 05 .......... |  04 மணித்தியாலங்கள் 04 நிமிடங்கள் ....................... |  01: 07 .............. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனீபா அப்துல் வஹாப் (இஸ்லாஹி)



# பரீட்சைக் கால பயனுள்ள ஆலோசனைகள் சில...

**ஒவ்வொரு** மாணவனும் தனது வாழ்க்கையில் பல பரீட்சைளை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றான். அதிலிருந்து விலகியி ருக்க யாருக்கும் சலுகையோ, விதிவிலக்கோ இருக்க முடியாது. தாம் எதிர்நோக்கும் பரீட்சை கள் எத்தகைய தென்றாலும் அதில் வெற்றி பெறும் மாணவர்களின் எதிர்காலம் இன்பங்கொழிக்கும் ஒரு வாழ்க்கையாக மாறிவிடுகிறது. வெற்றி பெறத் தவறும் மாணவர்களின் எதிர்காலம் கஷ்ட மும் வேதனையும் நிரம்பியதொரு வாழ்க்கை யாக மாறிவிடுகின்றது.

இலங்கையின் கல்விக் கொள்கை, அதன் அமைப்பு என்பவற்றை எடுத்த நோக்கும்போது மாணவர்களின் அறிவுத்தரத்தை மதிப்பிடும் கருவியாக பரீட்சைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை, பின்னர் O/L பரீட்சை, அதன் பின்னர் A/L பரீட்சை என்பன ஒரு மாணவனின் பாடசாலை வாழ்க்கைப் பயணத்தில் சந்திக்கவுள்ள முக்கிய பரீட்சைகளாக உள்ளன.

(சா/த) பரீட்சை என்பது ஒரு தடைதாண்டிப் பரீட்சை அல்லது ஒரு தகுதிகாண் பரீட்சையாகக் காணப்படுகின்றது. இப்பரீட்சையில் சித்தி பெறுகின்ற மாணவர்களே போட்டிப் பரீட்சை யாகக் காணப்படுகின்ற (உ/த) பரீட்சையில் தோற்ற முடியும். தவிரவும் ஏதாவது ஒரு தொழிலைப் பெற வேண்டுமெனின், (சா/த) தரப்பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். இது தொழில் பெறுவதற்கான அடிப்படைக் கல்வித் தகைமையாகக் கணிக்கப்படுகிறது. எனவே (சா/த) பரீட்சை என்பது திட்டமிட்டு, முன்ஆயத்தத்துடன் மிகக் கவனமாகத் தயாராக வேண்டிய ஒன்றாகும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த (சா/த) பரீட்கைக்கு இன்னும் ஒன்றரை மாதங்களே எஞ்சியிருக்கும் நிலையில் அப்பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு மாணவர்களாகிய நீங்கள் உங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

### சிறந்த முறையில் பரீட்சையை எதிர்கொள்ள சில பயனுள்ள குறிப்புகள்

எந்தப் பரீட்சையாகினும் அதில் சித்தியடைய வேண்டுமானால் கட்டாயம் அப்பரீட்சைக்குரிய பாடங்களைப் படித்திருக்க வேண்டும். உண்மையில் பரீட்சைக்குத் தயாராகும் விதம் ஒவ்வொரு பரீட்சையைப் பொறுத்தும் அப்பரீட்சைகளுக்குத் தயாராகும் மாணவர்களைப் பொறுத்தும் வேறுபடுகின்றது. இவர்களை பொதுவாக இரு பிரிவினர்களாகப் பிரிக்கலாம்.

**அ) பரீட்சைக்கு முன்கூட்டியே தயாராகின்றவர்கள்.**

**ஆ) பரீட்சை அண்மித்த நிலையில் தயாராகின்றவர் கள்.**

### அ) பரீட்சைக்கு முன்கூட்டியே தயாராகின்றவர்கள்

உண்மையில் குறித்த ஒரு பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டுமெனின் அதற்காக தங்களை முன்கூட்டியே தயார் செய்து கொள்வது மிக முக்கியமானதாகும். வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற வேட்கையுள்ள, புத்தி சாலித்தனமான மாணவர்களின் செயற்பாடு இதுவாகத்தான் இருக்க முடியும்.

### பரீட்சைக்குத் தயாராகுவது எவ்வாறு?

(1) பரீட்சை பற்றிய குழப்பம், பயம், வெறுப்பு இன்றி மனதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

பொதுவாக எல்லா மாணவர்களுக்கும் உள்ள பிரச்சினைதான் பரீட்சை பற்றிய அச்சமாகும். இது ஒரு மாணவனுக்கு ஏற்படுமானால் ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே அவன் பரீட்சைக்குத் தயாரானாலும் சரியான முறையில் தன்னை முன் ஆயத்தம் செய்ய முடியாமல் போய் விடும். மனக்குழப்பம், பதற்றம் என்பன, தான் படிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற விடயங்களை ஞாபகத்தில் பதித்துக் கொள்ள தடையாக அமைந்து விடும். எனவே படிப்பதற்கு முன் அச்சத்தை நீக்கி உள்ளத்தை தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். தன்னம்பிக்கை என்பது பரீட்சையில் வெற்றிபெறுவதற்கான அத்திபாரமாகும்.

**(2) நேர அட்டவணை ஒன்றைத் தயார் செய்தல்**

நேர அட்டவணையைத் தயாரிக்கும்போது ஒவ்வொரு பாடத்திற்கும் தனது அட்டவணையில் ஒதுக்கும் நேரம், அப்பாடத்தின் தன்மை, அப்பாடத்தின் மீது தனக்குள்ள ஆர்வம் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும். அவற்றைக் கருத்திற் கொண்டும் தனது ஏனைய வேலைகளைக் கருத்திற் கொண்டும் நேர அட்டவணை ஒன்றைத் தயார் செய்தல் வேண்டும். இதில் கவனிக்க வேண்டிய மற்றுமொரு முக்கியமான விடயம், உங்களுடைய அட்டவணையில் ஒவ்வொரு பாடத்திற்குமிடையில் போதுமானளவு இடைவேளை இருப்பதோடு குறிப்பிட்டளவு ஓய்வு நேரமும் இருக்க வேண்டும்.

**(3) கற்பதற்கான சிறந்ததொரு சூலை உருவாக்கிக் கொள்ளல்**

படிக்கும்போது உங்களுக்கு வசதியான, அமைதியான ஓர் இடத்தை தெரிவு செய்து கொள்ளுங்கள். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் படிக்கக்கூடிய சூழலை உருவாக்கிக் கொண்டால் அது பரீட்சைப் பெறுபேற்றில் 15% அதிகரிப்பை ஏற்படுத்தவல்லது. வேறு வார்த்தையில் சொல்வதாயின், தஹஜ்ஜுத் தொழுகைக்குப் பின் படிப்பது ஆரோக்கியமானதும் பயன்மிக்கது மாகும்.

**(4) படிக்கும் போதே குறிப்பெடுத்தல்**

பரீட்சைக்குத் தயாராகும் நோக்கத்துடன் படிக்கும்போது, முக்கியமென்று கருதுகின்ற குறிப்புகளை சுருக்கமாகக் குறித்துக் கொள்ளுங்கள். அட்டவணைகள், வரைபுகள், வரைவிலக்கணங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக இக் குறிப்புகள் காணப்பட வேண்டும்.

**(5) நேரத்தை வீணாக்கும் விடயங்களிலிருந்து தவிர்ந்திருத்தல்**

வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, கணினி விளையாட்டுக்கள், அரட்டை போன்ற விடயங்ககளிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்.

### ஆ) பரீட்சை அண்மித்த நிலையில் தயாராகின்றவர்கள்

பெரும்பாலான மாணவர்கள் இவ்வகையைச் சார்ந்தவர்களாகவே இருக்கின்றனர். இது ஆரோக்கியமற்ற ஒரு விடயமாகினும், இவர்களும் தங்களுடைய பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ள சில வழிமுறைகள் இருக்கவே செய்கின்றன.

**(1) பதற்றம், குழப்பம், அச்சம் என்பவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்.**

பரீட்சைக்காக தங்களை முழுமையாக ஈடுபடுத்துகின்ற மாணவர்களே அதிகம் சித்தியடைகின்றனர். எனவே மனதை திடப்படுத்திக் கொண்டு பரீட்சைக்கு தயாராக முற்படுங்கள். சிலர் தொழுகை, திக்ர், குர்ஆன் ஓதுதல் போன்ற வணக்க வழிபாடுகளைத் துறந்து படிக்க முற்படுவர். இது ஆரோக்கியமற்றது; பதற்றம், குழப்பம், மற்றும் அச்சத்தை மேலும் அதிகரிக்கக் கூடியது. படைத்த இறைவன் எம்முடன் இருக்கின்றான் என்ற உணர்வு உண்மையில் உள்ளத்தை திடப்படுத்தப் போதுமானதாகும்.

**(2) கடந்த கால வினாக்களைப் படித்தல்**

முன்கூட்டியே தயாராகாத நிலையில் மிகக் குறுகிய காலத்தினுள் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும்போது முழு பாடப்பரப்பையும் ஆரம்பம் முதல் கடைசி வரை முழுமையாக படித்து முடிப்பது பகற்கனவு. இருப்பினும், கடந்தகால வினாக்களை எடுத்து அவற்றோடு பரிச்சையமாக்கிக் கொள்வதினூடாக ஓரளவு முழுப் பாடப் பரப்பையும் உள்ளடக்கியதாக ஒரு மீட்டல் செய்து கொள்ள முடியும்.

குறித்த பாடத்தில் வரக்கூடிய ஒவ்வோர் அலகிலும் ஒவ்வொரு வருடமும் வந்துள்ள வினாக்களை ஒன்றாகத் தொகுத்து அந்த வினாக்களுக்கான விடைகளை ஆராய்கின்ற போது அந்த அலகில் நியாயமானதொரு அறிவைப் பெறமுடியும். இன்னும் எதிர்வரும் பரீட்சையில் வரக்கூடிய வினாக்களையும் ஓரளவு தீர்மானித்துக் கொள்ள முடியுமானதாக இருக்கும்.

**(3) மீட்டல் வகுப்புக்களிலிருந்து (Revision Session) பிரயோசனமடைதல்**

பரீட்சைகள் அண்மிக்கும்போது குறித்த பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் முடிக்கப்படாத அலகுகளிருந்தால் அவற்றை முடித்து வைப்பதோடு, மீட்டல் வகுப்புக்கள், கருத்தரங்குகள் மற்றும் மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றை ஏற்பாடு செய்து நடத்துகின்றனர்.

இத்தகைய நிகழ்வுகளில் கலந்து கொள்வது பரீட்சைக்குத் தயார்படுத்த மிகப்பெரிய சந்தர்ப்பமாக அமைகிறது. சில நேரம் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழக்கலாம் அப்போது கலந்து கொண்டவர்களிடம், குறிப்புக்களைப்பெற்று பிரயோசனமடைய முடியும்.

(4) வினாக்களின் எண்ணிக்கை மற்றும் தன்மைக்கேற்றவாறு தயார் செய்தல்.

குறித்த ஒவ்வொரு பாடத்திலும் வரக்கூடிய கேள்விகளின் எண்ணிக்கை வித்தியாசப்படும். சில வினாப் பத்திரங்கள் 5 வினாக்களையும் இன்னும் சில வினாப்பத்திரங்கள் 7 அல்லது 8 வினாக்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

எனவே 5 வினாக்கள் கொண்ட பாடத்திற்குத் தயாராகும்போது 5 வினாக்களுக்கு மாத்திரம் தயாராகாமல் இரண்டு வினாக்களை மேலதிகமாகச் சேர்த்து 7 வினாக்களுக்குத் தயாராக வேண்டும். காரணம் நாங்கள் எதிர்பார்த்து ஆயத்தமாகியிருக்கும் அதே வினாக்கள் வராமல் போய்விடலாம்.

அடுத்து, சில பாடங்கள் வரைவிலக்கணங்களை உள்ளடக்கியதாக இருக்கும் அதேவேளை இன்னும் சில பாடங்கள் கணக்கு மற்றும் கட்டுரை வினாக்களை உள்ளடக்கியதாக இருக்கின்றன. விஞ்ஞானம் போன்ற பாடங்கள் அதிகம் வரைவிலக்கணங்களை உள்ளடக்கியிருப்பதால் அவற்றை சிறந்த முறையில் தயார் செய்து கொள்ள வேண்டும்.

இது மிக இலகுவானது. தேவையான வரைவிலக்கணங்களை கையடக்கமான அட்டைகளில் எழுதி, அவற்றை மனனம் செய்யலாம். மனனம் செய்வதற்கு மிகச் சிறந்த வழி அந்த வரைவிலக்கணங்களை சொல்லுக்குச் சொல் பாடமாக்காமல் அதை விளங்க முற்படுவதாகும். பரீட்சையில் அதே வசனங்களை எழுதாமல் அதன் உள்ளடக்கத்தை எழுதினால் கூட மொத்தப் புள்ளிகளையும் பெறமுடியுமாக இருக்கும்.

(5) மனனம் செய்தல்

குறுகிய காலத்தில் பரீட்சைக்குத் தயாராகும் போது முக்கிய விடயங்களை மனனம் செய்வது தவிர்க்க முடியாத அம்சமாகும். பெரிய பந்திகளாயினும் சிறிய பந்திகளாயினும் அவற்றை மனனம் செய்யவேண்டுமென்றால் முதலில் அவற்றை எமக்கு விளங்கிய அமைப்பில் உடைத்து சிறிய வசனங்களில் எழுதிக் கொள்ள வேண்டும். அதன் பின் அவற்றை மனனம் செய்வதும் மீட்டல் செய்வதும் இலகுவானது.

(6) மீட்டல்

மனனம் செய்வதற்கு மிகப் பயனுள்ள அம்சம் திரும்பத் திரும்ப மீட்டுவதாகும். பரீட்சைக்கு இருக்கும் காலத்தைப் பொறுத்து பின்வரும் வழிமுறைகளில் சிலதையோ அல்லது அனைத்தையுமோ மீட்டலுக்காய் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. **சிறிய அட்டைகளில் குறிப்புக்களை எழுதி மீட்டல். இது மனனம் செய்ய இலகுவாக அமையும்.**
2. **குழுவாகச் சேர்ந்து படித்தல். பரஸ்பரம் உங்களுக்குள் வினாக்களைத் தொடுத்து அவற்றுக்கு விடைகளைக் கண்டுபிடிப்பதினூடாக விடயங்களை விளங்கிக் கொள்ளுதல்.**
3. **படிக்கும் அறையில் அட்டவணை, வரைபுகள், படங்கள் என்பவற்றைத் தொங்கவிடல்.**
4. **தமக்கு பரிச்சயமான பொருட்களுக்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கடினமான பெயர்களை வைத்தல்.**
5. **மனனம் செய்ய வேண்டிய விடயங்களை, பாடலாக மாற்றி அடிக்கடி படித்தல்.**
6. **சக மாணவர்களுடன் கலந்துரையாடல் - பரீட்சை மிக நெருங்கிய பின் அதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.**
7. **முக்கிய விடயங்களை Vocie recorder இல் பதிவு செய்து அடிக்கடி கேட்டல்.**

(7) பராக்காக்கும் விடயங்களிலிருந்து தவிர்ந்திருத்தல்.

(8) ஆரோக்கியமான தூக்கம், முறையான உணவுப்பழக்கம்.

ஒவ்வொரு நாளும் தூங்கச் செல்வதற்கு முன் ஒரு கிளாஸ் நீர் அருந்துங்கள், மூளையை உயிரோட்டமாக வைத்திருக்க மிக உந்து சக்தி யாக இது காணப்படுகிறது.

குறிப்பு: பரீட்சைக்கு ஒரு வாரம் இருக்கும் போது என்ன செய்ய வேண்டும், பரீட்சைக்கு முன் தினமும், பரீட்சையின் போதும் என்ன செய்ய வேண்டும் போன்ற அம்சங்கள் அடுத்த இதழில், இன்ஷா அல்லாஹ்.

ஏராளமான புள்ளிகளை தாராளமாகப் பெற்று பரீட்சையிலும் வாழ்க்கையிலும் வெற்றிபெற திட்டமிட்டு செயற்படுவோம் இன்ஷா அல்லாஹ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம் 6, 7, 8

ஏ.எல்.ஏ. நிஸார் (Maths Traind) B.A Hons, Dip in Edu
ஆசிரியர், கிரி/மெத்தேகெடிய முஸ்லிம் வித்தியாலயம், கெகுணகொல்ல

## சதவீதம்

- சதவீதம் என்பது நூற்றுக்கு உரிய வீதமாகும்.
- சதவீதம் (%) என்பது நூற்றுக்கு என்பதாகும்.
- 12% என்பது $\frac{12}{100}$ ஆகும்.
- 75% என்பது $\frac{75}{100}$ ஆகும். $\frac{75}{100} = \frac{3}{4}$ ஆகும்.
- பொதுவாக வீதங்களை (%) பின்னமாகவும்; பின்னங்கள், தசமங்களை வீதம் (%) ஆகவும் குறிப்பிடலாம்.

உதாரணம்:-

01. I. $17\% = \frac{17}{100} = 0.17$  II. $25\% = \frac{25}{100} = 0.25$

III. $33\frac{1}{2}\% = \frac{67}{100\times 2} = \frac{0.67}{2} = 0.335$

IV. $\frac{27}{5}\% = \frac{27}{100\times 5} = \frac{0.27}{5} = 0.054$

02. பின்னங்கள் அல்லது தசமங்கள் வரும் போது அவற்றை 100 ஆல் பெருக்குவதன் மூலம் வீதமாக (%) மாற்றலாம்.

I. $\frac{1}{2}\times 100 = 50\%$  II. $\frac{5}{2}\times 100^{50} = 250\%$

III. 0.7 X 100 = 70%  IV. 0.75 X 100 = 75%

V. 3.2 X 100 = 320%  VI. 72.4 X 100 = 7240%

VII. 0.57 X 100 = 57%

03. 07ம் தர வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 40 பேர். இன்று வகுப்புக்கு சமுகமளித்தோர் 32 பேர்.

I. வருகை தந்த மாணவர்களை, மொத்த மாணவர்களின் பின்னமாக:

$\frac{32}{40} = \frac{8}{10} = \frac{4}{5}$

II. வருகை தந்த மாணவர்களின் சதவீதம்

$\frac{4}{5}\times 100^{20} = 80\%$

III. வருகை தராத மாணவர்களை, மொத்த மாணவர்களின் பின்னமாகவும் சதவீதமாகவும் கூறுக.

பின்னமாக:- $\frac{8}{40} = \frac{1}{5}$

சதவீதமாக:- $\frac{1}{5}\times 100^{20} = 20\%$

04. $\frac{1}{4}, \frac{3}{5}, \frac{3}{10}$ என்பவற்றை சதவீத அடிப்படையில் ஒப்பிட்டு இறங்கு வரிசைப்படுத்துக.

$\frac{1}{4}\times 100^{25} = 25\%$  $\frac{3}{5}\times 100^{20} = 60\%$

$\frac{3}{10}\times 100^{10} = 30\%$

இறங்கு வரிசைப்படி $\frac{3}{5}, \frac{3}{10}, \frac{1}{4}$

05. தசமங்களை பின்னமாகக் காட்டி சதவீதமாக மாற்றல்.

I. $0.05 = \frac{5}{100} = \frac{5}{100}\times 100 = 5\%$

II. $3.5 = \frac{35}{10} = \frac{35}{10}\times 100^{10} = 350\%$

III. $0.075 = \frac{75}{1000} = \frac{75}{1000}\times 100 = 7.5\%$

IV. $12.05 = \frac{1205}{100} = \frac{1205}{100}\times 100 = 1205\%$

V. $0.5 = \frac{5}{10} = \frac{5}{10}\times 100^{10} = 50\%$

பயிற்சி

01. பின்வரும் பின்னங்களை சதவீதமாகக் காட்டுக.

I. $\frac{3}{10}$  II. $\frac{3}{8}$  III. $2\frac{1}{2}$  IV. $\frac{9}{25}$  V. $5\frac{7}{8}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. பின்வரும் சதவீதங்களைப் பின்னமாகக் குறிப்பிடுக.

I. 30%  II. 8%  III. $\frac{35}{2}\%$  IV. $27\frac{1}{2}\%$

V. 340%

06. 8 ஆம் தர மாணவர்கள், நடத்தப்பட்ட பரீட்சை ஒன்றில் கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 40 புள்ளிகளுக்கு பெற்றுக் கொண்ட புள்ளிகள் பின்வருமாறு;

கணிதம்: 24  தமிழ்: 32

விஞ்ஞானம்: 20  ஆங்கிலம்: 16

இப்புள்ளிகளை ஒவ்வொரு பாடத்திலும் மொத்தப் புள்ளிகளின் சதவீதமாக எடுத்துரைக்க.

கணிதம்: $\frac{24^{12}}{40_2} \times 100^5 = 60\%$

தமிழ்: $\frac{32^{16}}{40_2} \times 100^5 = 80\%$

ஆங்கிலம்: $\frac{16^{8}}{40_2} \times 100^5 = 40\%$

07. கடை வியாபாரி ஒருவர் கொண்டு வந்த 20 கிலோ கிராம் உருளைக் கிழங்கில் 3 கிலோ கிராம் கிழங்கு பழுதடைந்தது. பழுதடைந்த கிழங்கை, கொண்டு வந்த கிழங்கின் சதவீதமாகக் கூறுக.

$\frac{3}{20} \times 100^5 = 15\%$

08. ஒரு வகுப்பில் 45 மாணவர்கள் இருந்தனர். இதில் 60% ஆனது பெண் மாணவிகள் எனின், பெண் மாணவிகளின் எண்ணிக்கை யாது?

$\frac{60^3}{100_5} \times 45^9 = 27$ பெண் மாணவிகள்.

ஆண் மாணவர்கள்: 45- 27= 18 பேர்.

09. 500/= வின் 4% எவ்வளவு?

$\frac{4}{100} \times 500 = 20$ ரூபாய்

10. 2000 m இல் $5\frac{1}{4}\%$ எத்தனை?

$\frac{21}{100 \times 4} \times 2000^5 = 105\,m$

11. 700/=இன் 12% யாது?

$\frac{12}{100} \times 700 = 84$ /=

12. 400/= இன் $7\frac{1}{2}\%$ எவ்வளவு?

$\frac{15 \times 400^2}{100 \times 2} = 30$/=

13. மாம்பழம் ஒன்றின் விலை 20/= இல் இருந்து 10% ஆல் அதிகரிக்கப்பட்டது எனின், அதன் புதிய விலை யாது?

100/= இன் அதிகரிப்பு 10/=

$\frac{110}{100} \times 20 = 22$/=

∴ புதிய விலை 22/=

14. 1m ஹபாயா துணியின் விலை 200/=வில் இருந்து 230/= ஆக அதிகரித்தது எனின், விலை அதிகரிப்பின் சதவீதம் என்ன?

$\frac{30^{15}}{200} \times 100 = 15\%$

15. தளபாடத் தொகுதி ஒன்றின் விலை 8000/= ஆகும். பணவீக்கம் காரணமாக அதன் விலையை 20% ஆல் அதிகரிக்க நேர்ந்தது எனின், விலை அதிகரிக்கப்பட்ட பின் புதிய விலை யாது?

100/= க்கான அதிகரிப்பு = 20/=

∴புதிய விலை = $\frac{120}{100} \times 8000$

= 9600/=

16. காணியொன்றை விற்பனை செய்யும் போது தரகர் ஒருவர் 3% ஐ தரகுக் கட்டணமாக அறவிடுகின்றார். இக்காணி விற்பனையில் தரகர் 4200/= ஐ தரகுக் கட்டணமாக பெற்றுக் கொண்டார் எனின்,

I. காணி விற்கப்பட்ட விலை யாது?

II. காணி சொந்தக்காரனுக்கு கிடைத்த பணம் யாது?

I. $\frac{4200^{14}}{3} \times 100$  = 140.000/=

II. முறை 1:- 140,000 - 4200

=135,800/=

முறை: - 2

$\frac{42{,}000^{14}}{3} \times 97 = 135{,}800$ /=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு I.




"ஒரு முக்கோணியின் இரு பக்கங்களின் நடுப்புள்ளிகளை இணைக்க வரும் கோடு அதன் மூன்றாவது பக்கத்துக்கு சமாந்தரமாகவும் அதன் நீளத்தின் அரைப்பங்கு ஆகவும் அமையும்." எனும் தேற்றத்தை முன்னைய இதழில் பார்த்திருப்பீர்கள்.

இனி, $\Delta$ DEF இன் பரப்பளவு, $\Delta$ ABC இன் பரப்பளவின் என்ன பங்கு (பின்னம்) என்பதை அவதானிப்போம்.

$\Delta$ DEF = இன் பரப்பரளவு X சதுர அலகுகள் எனக் கொள்வோம்.

∴ இணைகரம் BDEF = 2x சதுர அலகுகள்

(DF இணைகரத்தின் மூலை விட்டம்)

∴ $\Delta$ BDF = X சதுர அலகுகள்

(மூலை விட்டம் இணைகரத்தின் பரப்பளவை இரு சம கூறிடும்)

இதேபோல் DECF ஓர் இணைகரம்

(EF மூலை விட்டம்)

∴ $\Delta$ EFC = X சதுர அலகுகள்

இதேபோல் AEFD ஓர் இணைகரம்

(ED மூலை விட்டம்)

$\Delta$ ADE = X சதுர அலகுகள்

∴ $\Delta$ ABC = 4X சதுர அலகுகள்

∴ $\Delta DEF = \frac{1}{4}\ \Delta ABC$

உரு II.




உருவில் $\Delta$ ABC இன் பக்கம் BC இன் நடுப்புள்ளி X ஆகும்.

AX இன் நடுப்புள்ளி Y ஆகும்.

$\Delta$ BXY ஆனது $\Delta$ ABC இன் என்ன பின்னம் எனக் காண்க.

இங்கு நீங்கள் பயன்படுத்த வேண்டிய தேற்றம் ஒன்று உள்ளது.

தேற்றம்: "ஒரே உயரமும் சம அடிகளையுமுடைய முக்கோணிகள் பரப்பளவில் சமமானவை"

∴ $\Delta$ ABX = $\Delta$ ACX

காரணம் BX = CX (சம அடிகள்)

பொது உச்சி A (ஒரே உயரம்)

இதேபோல் $\Delta$ ABY = $\Delta$ XBY

காரணம் AY = XY (சம அடி)

பொது உச்சி B (ஒரே உயரம்)

∴ $\Delta$ BXY = X சதுர அலகுகள் எனின்

$\Delta$ ABY = X சதுர அலகுகள்

∴ $\Delta$ ABX = 2X சதுர அலகுகள்

∴ $\Delta$ ACX = 2X சதுர அலகுகள்

∴ $\Delta$ ABC = 4X சதுர அலகுகள்

∴ $\Delta BXY = \frac{1}{4}\ \Delta ABC$ ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு III.




ABCD ஓர் இணைகரம்

P,Q,R,S என்பன பக்கங்கள் AB, BC, CD, DA என்பனவற்றின் நடுப்புள்ளிகள் எனின்,

I. PQRS ஓர் இணைகரம் எனவும்

II. $PQRS = \frac{1}{2}$ ABCD எனவும் காட்டுக.

மேற்படி தரவுகளில் மூலைவிட்டம் BD ஐ வரைவதன் மூலம் வெட்டுத் துண்டுத் தேற்ற பிரயோகத்தின் மூலம் விடையைப் பெற முடியும்.

$\Delta ABD$ இல் $AP = BP$ (P நடுப்புள்ளி)

$AS = DS$ (S நடுப்புள்ளி)

$\therefore SP = \frac{1}{2} DB$

$SP //= DB$ (தேற்றப்படி)

இதேபோல் $\Delta BCD$ இல் இருந்து

$RQ = \frac{1}{2} DB$

$2\,RQ = DB$ என பெறலாம்

$\therefore SP = \frac{1}{2} DB$, $RQ = \frac{1}{2} DB$ எனும் மேலே நிறுவல்களால் $SP = RQ$ எனவும்

SP//DB, RQ//DB எனும் நிறுவல்களால் SP// DB எனவும் முடிவுகளைப் பெறுகிறோம். எதிர்பக்கங்கள் SP, RQ என்பன சமனும் சமாந்தரமுமாகும்.

$\therefore$ PQRS ஓர் இணைகரம் (தேற்றப்படி)

PR எனும் கோட்டை வரைக.

$PB = \frac{1}{2} AB$ (தரவு)

$RC = \frac{1}{2} DC$ (தரவு)

ஆனால் $AB = DC$ (இணைகரத்தின் எதிர்ப் பக்கங்கள்)

$\therefore PB = RC$

ஆனால் $PB = RC$ (ABCD ஓர் இணைகரம்)

$\therefore$ PBCR ஓர் இணைகரம் (எதிர்ப்பக்கங்கள் சமனும் சமாந்தரமுமாக அமைவதால்)

$\therefore \Delta PQR = \frac{1}{2}$ PBCR (அதே அடியிலும் அதே சமாந்தரங்களுக்கும் இடையில் அமையும் முக்கோணமானது அவ்வமைவில் உள்ள இணைகரம் ஒன்றின் பரப்பிற்கு $\frac{1}{2}$ மடங்காகும்.)

இதேபோல் $\Delta PSR = \frac{1}{2}$ APRD என நிறுவலாம்.

ஆனால் $PBCR + APRD = ABCD$

$\therefore \frac{1}{2} PBCR + \frac{1}{2} APRD = \frac{1}{2} ABCD$

$\therefore \Delta PQR + \Delta PSR = \frac{1}{2} ABCD$

உருவில் $\Delta PQR + \Delta PSR = PQRS$

$\therefore PQRS = \frac{1}{2} ABCD$

**சிரிப்பு:**

**அதுவும் இதுவும்**

காலையில்...

மனைவி: கரண்ட் போயிற்று உடுப் பெல்லாம் எப்படி அயன் பண்ரது?

கணவன்: அப்பவே சொன்னேன் கரண்ட் இருக்கிற நேரம் பார்த்து அயன் பண்ணச் சொல்லி.

சற்றுப் பின்னர்...

மனைவி: கேஸ் முடிஞ்சுது. எப்பிடி சமைக்கிறது?

கணவன்: அப்பவே சமைச்சிருக்க லாமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம்

## 10, 11 தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: ஹாஜிமா ஜெஸீமா ஆதம் லெவ்வை (Bsc, C.P.O retired)
தேசிய கல்வி நிறுவகம்

## பௌதிகம், இரசாயனவியல், உயிரியல் பரப்புக்கள்

ஒவ்வொரு பாடப்பரப்பிலும் ஒரு வினாவைத் தெரிவு செய்து, மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

ஒரு வினாவுக்கு 20 புள்ளிகளாகும். 20X3=60 மொத்தப் புள்ளிகள் வழங்கப்படும்.

*எவற்றை அறிந்து கொள்வதற்காகப் பரீட்சிக்கப்படுகிறது?*

*1) விளக்கத்துடன் கூடிய அறிவு, சுற்றாடல் தாக்கங்கள் போன்றன.*

*2) தகவல்களைக் கையாளுதல்:*

*தரப்படும் தகவல்களிலிருந்து கோலங்கள், தொடர்புகளை இனங் காணல் போன்றன*

*3) பிரச்சினை தீர்த்தல்:*

*படிப்படியாக சான்றுகளை உபயோகித்து, பிரச்சினை ஒன்றைத் தீர்த்தல்*

*4) பரிசோதனைத் திறன்கள்:*

*விஞ்ஞான உபகரணங்களைக் கையாளுதல், அவதானங்கள், பதிவுசெய்ய பயிற்சி பெறல் முதலியவற்றை பரிசோதனை செய்திருந்தால் மட்டுமே வெளிப்படுத்தலாம்.*

*5) தொடர்புகள்: ஒப்பிட்டு விடையளித்தல், நியாயப்படுத்தல், நாளாந்த வாழ்க்கையில் விஞ்ஞானப் பிரயோகங்களை இனங் காணல்.*

*6) காரணங் கூறல்: விஞ்ஞான விளக்கம்*

*7) தொடர்பாடல்: வரைபுகள், சான்றுகள், குறியீடுகள் பயன்படுத்தி விளக்கல்.*

**வினா 01.**

ஒரே அளவான குச்சிகள் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு நிறத்திலும் 50 எண்ணிக்கையில் சிவப்பு, மஞ்சள், கறுப்பு, நீலம், பச்சை என நிறந்தீட்டப்பட்டன. பின்னர் குச்சிகள் அனைத்தும் நன்கு கலக்கப்பட்டு ஒரு பாத்திரத்தினுள் இடப்பட்டன.

முதலில் புற்தரையிலும் இரண்டாவதாக மணல் தரையிலும் மூன்றாவதாக அடர்ந்த மர நிழலிலும், குச்சிகள் சீராகப் பரப்பி, வைக்கப்பட்டன. பரப்பியிருந்த குச்சிகளை ஒவ்வொரு சூழலிலுமிருந்தும் 20 செக்கனில் எழுமாறாகப் பொறுக்கிக் கொள்ளுமாறு, மாணவர்கள் இருவர் இருவராக ஈடுபடுத்தப்பட்டனர். பின்னர் பொறுக்கிய குச்சிகளை அவற்றின் நிறத்துக்கு ஏற்ப பாகுபடுத்தி எண்ணிக்கைகள் குறித்து வைக்கப்பட்டன. குச்சிகள் மீண்டும் கலந்து முன்பு போன்றே பரப்பி வைக்கப்பட்டன. இவ்வாறாகப் பல தடவைகள் வாசிப்புக்களைப் பெற்றுப் பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டது.

| சூழல் நிறம் பச்சை | 20 செக்கன்களில் பொறுக்கிய குச்சிகளின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | நீலம் | பச்சை | சிவப்பு | மஞ்சள் | கறுப்பு |
| 1 வது தடவை | 3 | – | 10 | 8 | 4 |
| 2 வது தடவை | 5 | 1 | 12 | 11 | 6 |
| 3 வது தடவை | 4 | 2 | 14 | 12 | 8 |
| சூழல் நிறம் மஞ்சள் | | | | | |
| 1 வது தடவை | 6 | 8 | 10 | 1 | 7 |
| 2 வது தடவை | 10 | 11 | 11 | 1 | 12 |
| 3 வது தடவை | 9 | 10 | 12 | – | 13 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) சூழலின் நிறத்துக்கும் பொறுக்கிய குச்சிகளின் நிறத்துக்கும் இடையில் யாதேனும் தொடர்பு காணப்படுகின்றதா? அத் தொடர்பை விளக்குங்கள்.

2) ஏன் ஒரு தடவை மாத்திரம் முயலாது, பல தடவைகள், பல சூழலிலும் இந்த தொழிற்பாடுகள் செய்யப்பட்டன?

3) சூழலில் காணப்படும் அங்கிகளின் நிறத்துக்கும் மேற்படி அவதானிப்புக்குமிடையில் தொடர்பு உண்டா என விளக்குங்கள்.

4) ஏன் சில அங்கிகள் சூழல் நிறத்துக்கு ஒத்தவையாக இசைவாக்கமடைந்துள்ளன?

5) அவ்வாறான 3 அங்கிகளின் பெயர்களை எழுதுங்கள்.

6) இப்பரிசோதனை வெற்றிபெற தொழிற்பாட்டில் எடுத்துக் கொண்ட எடுகோள்கள் எவை?

**02ஆம் வினா**

A) i) தொடுகையுறும் மேற்பரப்புக்கு அமைய அமுக்கம் வேறுபடும் என்பதனைக் காட்டும் பரிசோதனையொன்றைத் திட்டமிடுங்கள்.

ii) நீர்ப் பாத்திரத்தின் அடியில் காணப்படுகின்ற சிறிய பந்தொன்றை நீரின் மேற்பரப்புக்கு கொண்டுவர வேண்டுமாயின் நீர் என்ன செய்வீர்?

iii) பட்டிகள் மூலமாக விசை ஊடுகடத்தப்படும் கருவிகள்/ பொறிகள் இரண்டு தருக.

iv) நெம்புகோல் வகைகள் 3 இனைக் காட்டும் வரிப்படம் வரைந்து L,E,F என்பவற்றைக் குறித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

v) சில்லும் அச்சாணியும் தத்துவம் எச்சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகிறது?

(பருமன் குறைந்த எத்தனத்தால் பருமன் கூடிய சுமையை அசைக்க முடியும்)

B) i) நீர்க்காப்புக்கான இரு வழிகளைத் தருக.

ii) மின் பாவனையைச் சிக்கனப்படுத்துவதற்கான ஆலோசனைகள் 3 தருக.

iii) மண்சரிவு, மண்அரிப்பு ஆகியவற்றைத் தடுக்கும் நடவடிக்கைக்கு வேண்டிய ஆலோசனைகள் 3 தருக.

**03 ஆம் வினா**

i) செப்பு சல்பேற்றுக் கரைசலினுள் வெவ்வேறாக
1)மக்னிசியம் 2)இரும்பு
3)வெள்ளி துண்டுகளை இடும்போது

a) ஒவ்வொன்றிலும் நிகழுபவற்றை அவதானித்தால் உமது அவதானத்தை தருக.

b) மக்னீசியம் + செப்புசல்பேற்று =...............
(பூர்த்தி செய்க)

ii) சோடியத்தை ஆய்வுசாலையில் எங்கு, எதில் சேமித்து வைப்பார்கள்? காரணம் யாது?

iii) அலுமினியம், நாகம் ஈரியல்பு உலோகங்கள் என்று கூறப்படுவதன் காரணங்கள் யாவை?

**04. விஞ்ஞான முறையாக விளக்குங்கள்**

குறிக்கோள்கள்:

- அன்றாட வாழ்வில் பெற்ற அனுபவங்களை விஞ்ஞான ரீதியாக விளக்கும் திறனைச் சோதித்தல்.
- இயற்கை நிகழ்வுகளை விஞ்ஞான தகவல்கள் மூலம் விளக்கக் கூடிய ஆற்றலைச் சோதித்தல்.

1) நீரில் இடப்பட்டிருந்த செங்குழியக்கலங்கள் சிதைந்து போயின. ஆனால் வெற்றிலைக் கலங்களோ வீங்கிக் காணப்பட்டன.

2) ஏன் கித்துள் கட்டிகளை வாங்கி வந்தீர்கள்? கித்துள் தூள் வாங்கியிருப்பின் விரைவாகக் கரைத்து விடலாம் என்றார் அம்மா.

3) மின்னல் கீற்றுக்களை அவதானித்த தம்பி, இடி இடிக்கப் போகின்றதெனக் காதைப் பொத்திக் கொள்கிறார்.

4) முற்றிய காசித்தும்பைக் கனியை மெதுவாகத் தொட்ட போதும் வெடிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) அயடீன் சேர்க்கப்பட்ட உப்பை, கடும் நிறங் கொண்ட போத்தல்களில் அடைத்து வைப் பது நன்று என ஆலோசனை கூறப் படுகிறது.

6) அவரைக் குடும்பத் தாவரங்களின் வேர்ச் சிறுகணுக்களில் வாழுகின்ற பற்றீரியா இனம் 'வியத்தகு அங்கி' எனப்படுகின்றது.

7) மின் வடங்களினூடாக, மின்துடிப்புக்க ளாக செய்திகளைக் கொண்டு செல்லும் தொலை பேசிகளிலும் பார்க்க, ஒளியியல் நார்கள் மூலம் ஒளித்துடிப்புகளாக செய்தி யைக் கொண்டு செல்லும் தொலைபேசி சிறந்தது எனக் கருதப்படுகிறது.

### விஞ்ஞானம் மாதிரி வினாக்கள்

**05. உயிரின் அடிப்படை அலகு கலமாகும். கலத்தினுள் தொழில்களை ஆற்றுகின்ற புன்னங்கள் காணப்படுகின்றன.**

A) கலத்தினுள் காணப்படும் ஐந்து பிர தான புன்னங்கங்ளைப் பட்டியல் படுத் துங்கள்.

| | புன்னாங்கம் | தொழிற்பாடுகள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

B) அப்புன்னங்கங்கள் ஒவ்வொன்றின தும் தொழிலொன்றை எழுதுங்கள்.

C) தாவரக் கலமொன்றை விலங்குக் கலமொன்றிலிருந்து எவ்வாறு வேறு பிரித்து அறிந்து கொள்ளலாம்?

**06. புவிக்கு மின்காந்த அலைகள் அனுப்பப்படு கின்றன. இவை உயிர் செயன்முறைக ளுக்கும் உயிரற்ற செயல்முறைகளுக்கும் தேவையான அடிப்படைச் சக்தியைத் தரு கின்றன. ஒன்றுக்கொன்று செங்குத்தான இரண்டு தளங்களின் வழியே மின்புலமும் காந்தப்புலமும் அசைவதால் அந்த இரு காந்தங்களுக்கும் செங்குத்தாக ஒரு திசையில் செல்லுகின்ற மின்காந்த அலைகள் உருவாகும். இயற்கைச் செயன்முறைகள் காரணமாக, மின் காந்த அலைகள் உருவாகும். இது அயனாக்க கூடிய, அயனாக்க முடியாத மின்காந்த அலைக ளென இருவகைப்படும்.**

i) மின் அலைகளுக்கு உதாரணங்கள் கூறுங் கள்.
(வானொலி அலை, நுண்ணலை, எக்ஸ் கதிர்கள், செங்கீழ்க் கதிர்)

ii) அயனாக்கமடையக் கூடிய மின்காந்த அலையைப் பெயரிடுங்கள்.

iii) தீங்கு பயக்கும் கதிர்கள் பூமியை அடையா தவாறு இயற்கையாகவே தடுக்கப்படுகின் றன. அது எவ்வாறு?
(ஓசோன் படைபற்றிய விளக்கம்)

iv) இயற்கையான அத்தடுப்புக்குச் சவாலாக அமையும் மனித நடவடிக்கைகள் விளக்கி, தடுக்க ஆலோசனைகள் வழங்குங்கள்.

## கணினியால் மனிதன் உருவான அதிசயம்
(Virtual Human XBox 360)

உங்களின் கேள்விக்கெல்லாம் பதில் சொல்வான். ஆனால் அவனை கிண்டல் செய்தால் உங்களை திட்டி விட்டுப் போய் விடுவான் இந்த மிலோ. யார் இந்த மிலோ? மிலோ நான்கு வயது சிறுவன்.

நிஜ நான்கு வயது சிறுவனுக்கும் இவனுக்கும் உள்ள வித்தியாசம் இவன் கணினியில் எழுதப்பட்ட ப்ரோக்ராம் என்பது மட்டுமே. உலகிலேயே முதன் முறையாக மனிதனாக தாராளமாக ஏற்றுக் கொள்ள முடியும் அளவிற்கு மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள கற்பனை கதாபாத்திரம்.

இவனுடன் விளையாடுபவர்களின் உடலசைவு கள் அகச் சிவப்பு உணர்விக்களால் உள்வாங்கப்பட்டு பின்னர் செயற்கை மதிநுட்பம் மூலமாக மிலோ புரிந்து கொள்ளும் வகையில் மாற்றப்படுகிறது. இதே செயல்பாடு மிலோ பதிலளிக்கும் போது தலைகீழாக நடக்கும் வகையில் கணினி ப்ரோக்ராம் மூலம் வடிவமைத்துள்ளது மைக்ரோசாப்ட். இதை மைக் ரோசாப்ட் சோதித்துக் காட்டியபோது இது ஒரு கணினி ப்ரோக்ராம் என யாராலும் நம்ப முடியவில்லை.

www.kuruvikal.blogspot.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்)

## பிறப்பும் வளர்ப்பும்

**பெயர்,** அஹ்மத் பின் முஹம்மத் பின் ஹன்பல் பின் ஹிலால் அல்அறபி அல்அத்னானி அஷ்ஷை பானி. இவர் தமது தாயின் வயிற்றில் சிசுவாக இருக்கின்றபோதே இவரது தாயும் தந்தையும் மர்வ் என்ற பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பக்தாத் நகருக்கு வந்துவிட்டனர். எனவே, இவர் பக்தாதிலே பிறந்து அங்கேயே வளர்ந்தார். இவர் அபூ அப்துல்லாஹ் என்ற புனைப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வந்தார். இவர் ஹதீஸ் கலையிலும் சட்டத் துறையிலும் முன்னோடியாகத் திகழ்ந்தார். இவர் 'இமாமு அஹ்லிஸ் ஸுன்னா' அதாவது அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத் தினரின் தலைவர் என்று அழைக்கப்பட்டார். ஹிஜ்ரி 164ஆம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம் பிறந்த இவர் 77 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார்.

## கல்வி

தனது வாழ்வில் 16 வயது பூர்த்தியாகும்வரை சாதாரணக் கல்வியைத் தேடினார். அதுவரை ஹதீஸ் கலை அறிஞர்கள் எவரிடமும் செல்லவுமில்லையெனப் பல வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஹதீஸ் கலையையும் ஹதீஸ்கள் தரும் விளக்கங்களையும் கற்றுத் தேர்வதற்காகத் தமது 16வது வயதில் தாயகம் துறந்து பல நாடுகளுக்கும் பயணம் செய்தார். வசதியின்மை காரணமாக யெமன் நாட்டிற்கு நடந்தே சென்று அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கினார். அவ்வேளை யெமன் நாட்டின் புகழ் பெற்ற அறிஞரும் 'முஸன்னப்' எனும் நூலின் ஆசிரியருமான இமாம் அப்துர் ரஸ்ஸாக் அஸ்ஸன்ஆனி (ரஹிமஹுல்லாஹ்) அவர்களிடமும் இன்னும் பல அறிஞர்களிடமும் ஹதீஸ்களைக் கற்றுக் கொண்டார். இப்பயணத்தின் காரணமாகப் பல துன்பங்களையும் துயரங்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை இவருக்கு ஏற்பட்டது. இவர் மக்காவை அடைந்தபோது "நீங்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகி இருக்கிறீர்களே" எனக் கூறப்பட்டது. அதற்கவர் "இமாம் அப்துர் ரஸ்ஸாக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களிடம் நான் படித்துக் கொண்ட கல்வியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நான் பட்டதொன்றும் சிரமமேயல்ல. ஸாலிம் பின் அப்துல்லாஹ் (ரஹிமஹுல்லாஹ்) வழியாகவும் ஸஈத் பின் அல்முஸய்யப் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் வழியாகவும் இமாம் ஸுஹ்ரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் அறிவிக்கின்ற நபிமொழிகளையெல்லாம் இமாம் அப்துர் ரஸ்ஸாக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன்" என்று பதிலுரைத்தார்கள்.

புகழ்பெற்ற அறிஞர்களான யஹ்யா பின் மஈன், இஸ்ஹாக் பின் ராஹவைஹி, முஹம்மத் பின் இத்ரீஸ் அஷ்ஷாபிஈ (ரஹிமஹுமுல்லாஹ்) போன்றோரிடமிருந்து ஹதீஸ்களைக் கற்றுக் கொண்டதுடன் அவற்றை அறிவித்துமிருக்கி றார்கள். இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) இவரை எகிப்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தபோதும் பொருளாதார வசதியின்மை காரணமாக இவர் எகிப்துக்குச் செல்லவில்லை.

இரண்டாவது முறையாக இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பக்தாத் சென்றபோது அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களிடம் கீழ்வருமாறு கூறினார்கள்: "அபூ அப்துல்லாஹ்வே! ஸஹீஹான ஹதீஸ்கள் உங்களுக்குக் கிடைத்தால் அதனைப் பற்றி எனக்கும் அறிவியுங்கள். அவை ஹிஜாஸ், ஷாம், ஈராக், யெமன் போன்ற எந்த நாட்டில் கிடைக்கப்பெற்றாலும் சரி; அங்கு சென்று நானும் அவற்றை அறிந்து கொள்கின்றேன்."

இமாம் அஹ்மத் ஹன்பல் பின் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களைப் புகழ்ந்துரைக்கும்போது இமாம் இப்னு கஸீர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்: "இமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களைப் பார்த்து இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறிய இவ்வார்த்தைகள் இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுடைய கௌரவத்தைப் பறைசாற்றுவதுடன் அவரது அறிவுக்குப் பெரும் அத்தாட்சியுமாகும்:

"இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுடைய அறிவுக்கு அவரது முஸ்னத் என்ற ஹதீஸ் நூல் போதிய சான்றாகும். 75000 ஹதீஸ்களிலிருந்து இந்நூலைத் தொகுத்துள்ளார்கள். புகழ்பெற்ற ஆறு ஹதீஸ் நூல்களிலும் இடம்பெறாத ஏராளமான ஹதீஸ்கள் இதில் காணப்படுகின்றன."

ஹதீஸ் துறையில் இவரிடம் காணப்பட்ட அபார திறமை பற்றி இவரது புதல்வரான இமாம் அப்துல்லாஹ் கூறுவதாவது, "எனது தந்தை ஒரு மில்லியன் நபிமொழிகளை மனனமிட்டு வைத்திருந்தார்கள்."

இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் அறிவுக் கூர்மையையும் புகழையும் பற்றி இஸ்லாமிய அறிஞர்களும் சட்டக்கலை வல்லுநர்களும் கூறியுள்ள கூற்றுக்களை நோக்குவோம்.

இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "ஈராக் நாட்டிலிருந்து நான் வெளியேறும்போது அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களை விடச் சிறப்பு, அறிவு, பேணுதல், இறையச்சம் போன்றவற்றில் மிகைத்த வேறொருவரையும் அங்கு காணவில்லை."

இமாம் புகாரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "முஃதஸிலா ஆட்சியாளர்களால் இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் நாம் ஈராக்கின் தென் பகுதி பஸராவில் இருந்தோம். அப்போது இமாம் அபுல் வலீத் அத்தயாலிஸி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுவதை நான் கேட்டிருந்தேன்: "பனூ இஸ்ரவேலர்கள் மத்தியில் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் வாழ்ந்திருந்தால் அவர் ஓர் அற்புத மனிதராக விளங்கியிருப்பார்."

அபூ உமர் அந்நஹ்ஹாஸ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுவதாவது: "மார்க்க விவகாரங்களில் இவர் அறிவின் சிகரம். உலக விவகாரங்களில் பொறுமையின் வடிவம். உலகப் பற்றற்ற தன்மைக்கு முன்னுதாரணம். ஸாலிஹீன்கள் வரிசையில் முன்னோடி. இதற்கு முன்னர் மரணித்த அறிஞர்களுடன் ஒப்பிடும்போது இவருக்கு நிகர் இவரேதான். உலகத்தின் சுக போகங்கள் எடுத்துக் காண்பிக்கப்பட்டபோது அவற்றை உதறித்தள்ளியவர். பித்அத் எனப்படும் நூதன அனுஷ்டானங்களைத் தடை செய்தது மட்டுமன்றி, அவற்றைக் குழிதோண்டிப் புதைத்தவர்."

இமாம் அலி இப்னுல் மதீனீ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுவதாவது: "குழப்பமான ஒரு விஷயத்தில் இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) எனக்கு மார்க்கத் தீர்ப்பு வழங்கிவிட்டால் அவ்விஷயத்தில் நான் மறுமையைப் பயப்பட மாட்டேன்."

இமாம் அபூ ஸுர்அதுர் ராஸி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுவதாவது; "இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) தவிர வேறு யாரும் எமது தோழர்களில் இளம் வயதிலேயே சட்டத்துறையில் மிகுந்த தெளிவுடையவராகக் காணப்படவில்லை."

## இமாமவர்களது விவாதத் திறன்

இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் அறிவுக் கூர்மைக்கும் விவாதத் திறமைக்கும் முஃதஸிலா இயக்கத்தின் அறிஞரான அப்துர் ரஹ்மான் என்பவருக்கும் இவருக்குமிடையில் நடைபெற்ற விவாதம் போதிய சான்றாகும். அல்லாஹ்வின் வாக்கான அல்குர்ஆன் படைக்கப்பட்டது என்ற முஃதஸிலா சிந்தனை வேரூன்றிப் போயிருந்த ஹிஜ்ரி 3 ஆம் நூற்றாண்டில் இவ்விவாதம் நடைபெற்றது. நீண்ட நாட்கள் நடைபெற்ற இவ்விவாதத்தில் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கு முன்னால் அறிஞர் அப்துர் ரஹ்மானுக்கும் அவரது சகாக்களும் வாயடைத்து நின்றனர்; திகைத்தும் போயினர். அசத்தியம் நிலை குலைந்து சத்தியம் நிலைத்தது.

## இமாமவர்கள் எழுதிய நூற்கள்

இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பெரும் பெரும் நூல்களையும் சில சிறு நூல்களையும் எழுதி மார்க்கத்துக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார்கள். இவரின் மிகப் பிரதானமான நூல் முஸ்னத் என்பதாகும். இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) எனும் போதே முஸ்னத் ஹதீஸ் நூல் நினைவுக்கு வந்துவிடும். இது மிகப் பெரிய ஹதீஸ் கலைக் களஞ்சியமும் நிறைந்த பயன் தரக்கூடிய நூலுமாகும்.

இந்நூல் பற்றி அவர் குறிப்பிடும்போது. "...நான் இந்நூலை 75000 ஹதீஸ்களிலிருந்து தொகுத்துள்ளேன். இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய ஹதீஸ்களில் முஸ்லிம்கள் கருத்து முரண்பட்டுக் கொண்டால் நபிமொழியை உறுதிசெய்து கொள்ள இந்நூலை நாடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை இதில் காணப்பட்டால் அதுவே போதுமான சான்றாகும். மாறாக இந்நூலில் காணப்படாவிட்டால் அது சான்றாகாது."

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 75000 ஹதீஸ்களை மனனம் செய்திருந்தார்கள். முஸ்னத் எனும் இந்நூல் இமாம வர்கள் தமது கையால் எழுதியதாகும். இந்நூலின் அறிவிப்பாளர் அவரது புதல்வரான அபூ அப்துர்ரஹ்மான் அப்துல்லாஹ் (ரஹிமஹுல்லாஹ்) ஆவார். இந்நூலைத் தொகுப்பதற்கு இமாம் அவர்களுக்கு மிக நீண்ட காலம் தேவைப்பட்டது. தமது கையால் எழுதிய இந்நூலை நேரடியாக தமது இரு புதல்வர்களான ஸாலிஹ், அப்துல்லாஹ் போன்றோர்களுக்கும் தமது சிறிய தந்தை இஸ்ஹாக் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கும் வாசித்துக் காட்டினார்கள். அறிவிப்புக்களை உறுதிப்படுத்தவும் அதனை நெறிப்படுத்தவுமே இவ்வாறு செய்தார்கள். ஏனைய ஹதீஸ் நூல்களில் அடங்கியுள்ள ஹதீஸ்கள் இதிலும் இடம்பெற்றுள்ளன. இந்நூலை இவர் திரட்டியதன் நோக்கம் பலவீனம், இட்டுக்கட்டுதல் போன்றவற்றிலிருந்து ஹதீஸ்களைப் பாதுகாப்பதாகும். ஆறு பாகங்களில் இமாமவர்களின் இந்நூல் பிரசுரிக்கப்பட்டது.

இந்நூலை எளிய முறையில் சரியான நூலாக்கஞ் செய்து அதிலுள்ள ஹதீஸ்களைத் திறனாய்வு செய்து தரப்படுகின்ற பெரும் பணியைச் செய்ய இந்நூற்றாண்டின் ஹதீஸ்கலை அறிஞர்களில் ஒருவரான அல்லாமா அஹ்மத் ஷாகிர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் முன்வந்தார்கள். எனினும் தனது மறைவுக்கு முன் இதனை முற்றாக நிறைவு செய்ய அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இதன் நான்கில் ஒரு பகுதியை 15 பாகங்களில் பிரசுரித்து ஹதீஸ் கலைக்குப் பெரும் பங்காற்றினார்கள். இவர் ஆரம்பித்து வைத்த இச் சிறந்த பணியை நிறைவு செய்யும் வகையில் சஊதி அரேபியாவைச் சேர்ந்த பேரறிஞர் அப்துல் முஹ்ஸின் அத்துர்கி அவர்களின் தலைமையில் சில அறிஞர்கள் அயராது உழைத்து இப்போது இப்பணி நிறைவு பெற்றிருக்கிறது. 50 பாகங்களில் இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இமாமவர்களின் முஸ்னத் எனும் இந்நூலுக்கு அல்லாமா அஹ்மத் அப்துர் ரஹ்மான் அஸ்ஸாஆதீ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் விரிவுரை எழுதியுள்ளார்கள். மேலும் இவர் மூல நூலைச் சட்ட விவகாரங்களின் அடிப்படையில் அத்தியாய ஒழுங்கின் கீழ் அமைத்துள்ளார். நல்லதொரு விரிவுரையுடன் கூடிய இந்நூல் ஏனைய தொகுப்புகளில் தொடர்புபட்ட ஹதீஸ்களையும் அடையாளப்படுத்தியுள்ளது. 24 பாகங்களில் வெளியாகியுள்ள இது முஸ்னத் எனும் நூலுக்கு எழுதப்பட்ட சிறந்த விரிவுரையாகும். இந்நூலின் பெயர் 'அல்பத்ஹுர் ரப்பானி ஷரஹ் முஸ்னதில் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அஷ்ஷைபானி' என்பதாகும். இதன் ஆசிரியரான அஹ்மத் அப்துர் ரஹ்மான் அஸ்ஸாஆதீ (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் புகழ்பெற்ற இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்க ஸ்தாபகரான பேரறிஞர் ஹஸன் அல்பன்னா (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் தந்தையாவார்கள்.

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இறுதியாக எழுதிய நூல் முஸ்னத் ஆகும். இதற்குப் பின் வேறு நூல்கள் எதனையும் எழுதியதாகத் தெரியவில்லை. "ஆசிரியர்களின் நாவினால் நேரடியாகக் கற்பதே முறையான கல்வியாகும்" என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும் வகையில் இறுதிவரை கற்பித்தல் துறையில் ஈடுபடலானார்.

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இது தவிர்ந்த இன்னும் பல நூல்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் சில வருமாறு:

- அல்இலல் வமஃரிபதுர் ரிஜால்
- அர்ரத்து அலல் ஜஹ்மிய்யா
- கிதாபுஸ் ஸலாஹ்
- கிதாபுஸ் ஸுன்னா
- கிதாபுஸ் ஸுஹ்த்
- கிதாப் பழாஇலுஸ் ஸஹாபா
- அத்தாரீஹ்
- அந்நாஸிக் வல் மன்ஸூக்
- அத்தப்ஸீர்
- அல்மனாஸிக்
- அல்அஷ்ரிபா

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

இவ்வாறு தமது நூல்கள் மூலம் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் பெருந் தொண்டாற்றினார்கள். இன்றுங்கூட இவரது நூல்கள் மக்களின் கைகளில் தவழ்கின்றமைக்கான காரணம் இவரிடம் காணப்பட்ட ஆழ்ந்த இறைநம்பிக்கையும் தூய எண்ணமுமே (இஹ்லாஸ்) என்றால் மிகையாகாது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது பணிகளைப் பொருந்திக் கொண்டு அதற்குரிய நற்கூலியை வழங்குவானாக!

நன்றி: சமரசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நிமிடம்தானே என்ற எண்ணமா?

**இலக்கு,** காரிய முக்கியத்துவம், பொறுப்பு இவற்றை நீங்கள் அறிந்து கொண்டால் மட்டும் போதாது. பயனளிக்கும் விதத்தில் நேரத்தை கையாள்கிறீர்களா? என்பது முக்கியம்.

எதை எடுத்தாலும் அதை பிறகு செய்வோம் என்று எண்ணுவோர் நம்மில் பலர் உள்ளனர். இன்னும் சிலர் ஒரு நிமிடம் போனால் குறைந்தா போகப் போகிறது? என்று கேட்பார்கள். ஆம் நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் குறைந்துதான் போகப் போகிறது. எது குறையப் போகிறது என்றால் அது உங்கள் ஆயுள்.

ஒரு சிலரிடம் 'ஒரு நிமிடம்தானே' என்ற அலட்சியப் போக்கு காணப்படுகிறது. அந்த ஒரு நிமிடமும் எவ்வளவு பொன்னானது என்பதை அவர்கள் கணிப்பிட மறுக்கின்றனர்.

அடுத்த நிமிடம் எமக்கு சொந்தமென உறுதியளிக்க முடியாது. ஏனெனில், எமக்கான காலம் நெருங்கிவிட்டால், எமது உயிரைக் கைப்பற்றுமாறு அல்லாஹ்வின் உத்தரவு மலக்குல் மௌத்திடம் கிடைத்துவிட்டால், ஒரு நிமிடமேனும் தாமதிக்காமல் எமது உயிரைக் கைப்பற்றி விடுவார் அவர். இந்த நிமிடம் நாம் செய்வோம் என்று எண்ணிய அடுத்த நிமிடமாகவும் அது இருக்கலாம்.

நாம் ஒரு நிமிடத்திற்காக காத்திருக்கலாம். ஆனால் நமக்காக நேரம் ஒரு நிமிடமேனும் தாமதிக்காது. ஆகவே, ஒரு நிமிடம்தானே என்ற அலட்சியம் வேண்டாம் நமக்கு.

நேர முகாமைத்துவம் என்பது மிகவும் முக்கியமான விடயம். ஒரு நிமிடத்தையேனும் வீணடிக்காதீர்கள். அல்லாஹ் வீண் விரயம் செய்வதை ஒருபோதும் விரும்ப மாட்டான். அது நேரமாயினும் சரியே.

சென்ற நொடி என்றுமே திரும்பாது. எனவே, நாம் கழிக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் முக்கியமானது. அல்லாஹ் நாம் செலவு செய்கின்ற ஒவ்வொரு நிமிடத்திற்கும் கணக்கு கேட்பான். அதற்கு நாம் பதில் சொல்லியே ஆக வேண்டும். இன்றோடு வீணான பொழுதுகளை மறந்திடுங்கள். அல்லாஹ்விற்கு பதில் சொல்லக் கூடியவாறு ஒவ்வொரு நிமிடத்தையும் கழித்திடுங்கள்.

**நேரத்தை திட்டமிடுவது எப்படி?**

- எது உங்களுடைய பொறுப்பு, எது உங்களுடைய பொறுப்பாகாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
- உங்களுடைய இலக்கு பற்றி தெளிவாக சிந்தியுங்கள். அதற்கேற்ப செயற்படுங்கள்.
- அந்தந்த நிமிடத்திற்கான காரியத்தை அறிந்து கொள்ளுங்கள்.
- எந்த வேலையை எவ்வளவு நேரத்திற்குள் செய்யலாம் என்பதை பகுத்தறியுங்கள்.
- அடுத்த நிமிடம் (பிறகு) செய்யலாம் என்ற அலட்சியப் போக்கை தவிருங்கள்.
- வேலைகளின் தன்மைக்கேற்ப விரைவாக செயற்படுங்கள்.
- இந்த நிமிடத்திற்கும் அல்லாஹ்வுக்கு பதில் சொல்ல வேண்டுமென்பது பற்றி சிந்தித்து, செயற்படுங்கள்.

செய்ய வேண்டிய காரியங்களை குறித்த நேரத்திற்கே செய்து முடித்தால், பிறகு என்ற வார்த்தைக்கே இடமிருக்காது. எந்த வேலையையும் தாமதிக்காதீர்கள். தாமதித்தால்தானே 'ஒரு நிமிடம்தானே, அதற்குள் என்னவாகி விடப் போகிறது?' என்ற எண்ணம் விளையும். ஒரு நிமிடம்தான் முக்கியமானது அதற்குள் எதுவும் ஆகலாம். ஏன் உயிரும் கூட போகலாம். நம்மைப் போல மலக்குல் மௌத் ஒரு நிமிடம் தானே, போனால் போகட்டும் என்று இருக்க மாட்டார்.

ஆகவே ஒரு நிமிடம் தானே என்ற எண்ணம் இனி நமக்குள் வேண்டாம். அலட்சியம் நிச்சயம் ஆபத்தில்தான் முடியும். சோம்பேறிகளை அல்லாஹ் விரும்ப மாட்டான். அல்லாஹ் விரும்பாதவர்களின் கூட்டத்தில் இனி நாம் இருக்க வேண்டாம். அல்லாஹ் விரும்பக்கூடிய ஸாலிஹான மனிதர்களாய் நாம் வாழ்ந்து மரணிக்க வேண்டும், இன்ஷா அல்லாஹ். எம் அனைவரையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

**ஷபானா பின்த் சுகைப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் I**

**நேரம் 45 நிமிடங்கள்**

தயாரிப்பு: எம்.எம். முபாரக், எஸ்.ஐ.எல். முஸம்மில்

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. கீழ் உள்ள நான்கு உருக்களில் இரண்டு உருக்கள் மட்டும் ஒரே மாதிரியானவை அவ்விரு உருக்களும் யாவை?




I. A யும் C யும் II. B யும் D யும் III. A யும் D யும்

2.




I. A யும் C யும் II. B யும் C யும் III. C யும் D யும்

3. வெற்றுக் கட்டத்திற்கு வர வேண்டிய உருவை வரைக.



4. [3 4 5] [4 5 6] [5 6 7] [ ]

□ × □ = 9 ○ — □ = 4

□ + △ = 9

5. ○ இன் பெறுமானம் I. 5 II. 3 III. 7

6. △ × ○ இன் பெறுமானம்

I. 42 II. 24 III. 30

7. [79 + 97 × 3] எண்கூட்டிற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.

I. 582 II. 528 III. 568

எண் கோலங்களில் வர வேண்டிய எண்ணை எழுதுக.

8. 1,4,9,16, [ ] 9. 1,3,6,10 [ ]

10. நிலத்தின் மேற்பரப்பில் படரும் கொடி எது?

I. பாகல் II. அவரை III. பூசணி

11. வேரின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம் எது?

I. குரோட்டன் II. ஈரப்பலா III. முருங்கை

12. பிரிவுகள் காணப்படும் இலைகள் யாவை?

I. வெண்டி இலை, பாகல் இலை

II. அலரி, மரவள்ளி

II. ஈரப்பலா, மா

13. கவ்வாத்து செய்யப்படும் தாவரம் எது?

I. குரோட்டன் II. தேயிலைச் செடி III. வாழை

14. இதய வடிவில் காணப்படும் இலை எது?

I. மிளகு II. தாமரை III. வல்லாரை

15. சிறிய இலைகளைக் கொண்ட தாவரம் எது?

I. முருங்கை, விளா II. புகையிலை, அகத்தி III. எலுமிச்சை

பின்வரும் வாக்கியங்களில் எழுவாய்க்கு கோடிடுக.

16. வயலை எருதுகள் உழுதன.

17. மான்கள் துள்ளி விளையாடின.

18. போட்டியில் சதீஷ் தோல்வியுற்றான்.

19. சித்திரப் போட்டி மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது.

20. கவலை இல்லாது வாழ்ந்தனர் மனிதர்கள்.

21. அதிக நீர் தேவைப்படும் தாவரம் எது?

I. நெல் II. தென்னை III. பலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. பின்வருவனவற்றுள் தண்டு உள்ள தாவரம் எது?

I. நாயுருவி II. சோளம் III. கமுகு

23. பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பிராணி எது?

I. தேனீ II. தும்பி III. வௌவால்

24. உணவுக்கு பயன்படும் பூ எது?

I. வாழைப்பூ II. அவரைப் பூ III. தென்னம் பூ

25. வாழ்நாளில் ஒரு முறை மட்டும் பூக்கும் தாவரம் எது?

I. வாழை II. பலா III. மாதுளை

பின்வரும் தாவரத்தின் விதைகளின் பெயரை எழுதுக.



26. .......



27. .......



28. .......



29. ........

30. மஞ்சள் நிறமான காய்கறிகள் அல்லது பழங்களில் அதிகமாகக் காணப்படும் விட்டமின் எது?

I. விட்டமின் C II. விட்டமின் A III. விட்டமின் B

31. ஒட்டுதல் மூலம் இனப்பெருக்கம் செய்யக் கூடிய தாவரம் எது?

I. அம்பரல்லா II. முருங்கை III. பலா

32. பெருந்தோட்டப் பயிர்கள் யாவை?

I. தேயிலை, இறப்பர், மிளகு

II. தேயிலை, இறப்பர், தென்னை

III. கறுவா, ஏலம், மிளகு

33. தண்டினது தொழில் யாது?

I. நீர், கனியுப்புக்களை கடத்தல்

II. உணவு தயாரித்தல்

III. ஒளித்தொகுப்பு நடத்தல்

34. மஞ்சடி விதைகளைப் பயன்படுத்தி விளையாடப்படும் கிராமிய விளையாட்டு யாது?

I. பல்லாங்குழி II. தாயக்கட்டை III. குளம் கரை

35. கிராமிய விளையாட்டுக்கள் யாவை?

I. கிளித்தட்டு, கிட்டிப்புள்

II. சடுகுடு, கரப்பந்தாட்டம்

III. முட்டி அடித்தல், பானம் அருந்துதல்

பின்வருவனவற்றின் ஒலி மரபுகளை எழுதுக.

36. பல்லி ............ 37. யானை ................

பின்வருவனவற்றுக்கு பன்மைச் சொற்கள் எழுதுக.

38. பல்..................... 39. முள்..................

பின்வரும் சொல்லுக்கான அதே கருத்தைத் தரும் இரு பெயர்ச் சொற்கள் தருக.

40. வீடு ................. 41.................

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு கருத்தைத் தருக.

42. BOAT...... 43. BEAR ...... 44. AGE .......

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தைத் தருக.

45. බඩ ................. 46. ගොනා .............

பின்வருவரும் சொற்களுக்கு எதிர்க்கருத்து தருக.

47. கீழ்: ............ 48. நன்மை: ...............

49. காலை: ............ 50. ஆரவாரம்: ..........

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1- 3 | 17- மான்கள் | 34- 2 |
| 2- 1 | 18- சதீஷ் | 35- 1 |
| 3-  | 19- சித்திரம் | 36- சொல்லும் |
| | 20- மனிதர்கள் | 37- பிளிரும் |
| 4- 6,7,8 | 21- 1 | 38- பற்கள் |
| 5- 3 | 22- 1 | 39- முட்கள் |
| 6- 6 | 23- 1 | 40- இல்லம் |
| 7- 2 | 24- 1 | 41- மனை |
| 8- 25 | 25- 1 | 42- படகு |
| 9- 15 | 26- கோதுமை | 43- கரடி |
| 10- 3 | 27- பருத்தி | 44- வயது |
| 11- 2 | 28- காசித்தும்பை | 45- வயிறு |
| 12- 1 | 29- பொன்னச்சி | 46- மாடு |
| 13- 2 | 30- 2 | 47- மேல் |
| 14- 3 | 31- 1 | 48- தீமை |
| 15- 1 | 32- 2 | 49- மாலை |
| 16- எருதுகள் | 33- 1 | 50- அமைதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

**வினாப்பத்திரம் II**

**நேரம்**
**1 மணி 15 நிமிடம்**

**பின்வரும் பாடலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்**
**தந்தையர் நாடெனும் பேச்சினிலே - ஒரு**
**சக்தி பிறக்குது மூச்சினிலே**

1. பெற்றோரில் ஒருவர் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளார். அவர் யார்?
2. காதிலே பாய்வது எது என கவிஞர் குறிப்பிடுகிறார்?
3. பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சினைப் பெயர் ஒன்றைக் குறிப்பிடுக?
4. மூச்சினிலே பிறப்பது எதுவென கவிஞர் குறிப்பிடுகின்றார்?
5. பிறக்குது என்பதன் எதிர்ப்பதம் யாது?

**பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

6. අහස නිල් පාටයි ..............................
7. රාධා අඬනවා ..............................

**பின்வரும் வினாக்களுக்கான விடைகளின் இலக்கங்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

8. பழமரங்களிலே பேணிகளைக் கட்டி தொங்க விடுவது.

I. பழங்கள் பழுப்பதற்காக
II. இரை தேடிவரும் பறவைகளை விரட்டுவதற்காக
III. பழ மரங்களை அழகுபடுத்துவதற்காக (..........)

9. ஆறுகள் ஓடி சென்று முடிவடையும் இடம்

I. மலைகள் II. பள்ளங்கள் III. கடல்கள் (..........)

10. வெள்ளைப் பிரம்பை பாவிக்கும் ஒருவர்

I. வைத்தியர் II. கபோதி III. ஆசிரியர் (........)







11. ஒரு தோடம்பழத்தின் விலை யாது?
12. இரண்டு மாம்பழங்களின் விலை யாது?
13. தேசிய இலச்சினையை வடிவமைத்தவர் யார்?

I. ஸ்டில் ஒல்கோட் II. மாபலகம விபுல சார ஹிமி III. நல்லதம்பி

14. ஒரு குறிப்பிட்ட காலத்தில் இந்த தாவரத்தின் எல்லா இலைகளும் உதிர்ந்து விடும். அத்தாவரம் எது?

I. வேம்பு II. இலவம் III. மரமுந்திரிகை

15. ஒரு தடவையில் அதிக முட்டையிடும் பிராணி எது?

I. பாம்பு II. கோழி III. ஆமை

16. ஓணான் எங்கு முட்டை இடும்?

I. மண் II. மரப்பொந்து III. இலைகளில்

17. இலங்கையை கடைசியாக ஆண்ட மன்னன் யார்?

I. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்
II. விஜயன் III. காசியப்பன்

18. தான் செல்லும் இடமெல்லாம் குஞ்சுகளை கூட்டிச் செல்லும் பிராணி எது?

I. காகம் II. கோழி III. புறா

19. குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி வழங்கும் அலுவலகம்

I. வைத்தியசாலை
II. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்
III. பாடசாலை

20. வியாபார நடவடிக்கைகளின்போது விளம்பரம் செய்யப் பயன்படும் ஊடகங்கள் யாவை?

I. பத்திரிகை, துண்டுப் பிரசுரங்கள்
II. வானொலி, வீடு
III. வீடு, பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

*21.* நுளம்பு உற்பத்தியாகிவிடாமல் இருப்பதற்கு நாம் செய்ய வேண்டியது

I. நுளம்பு வலைகளைத் தொங்கவிடல்

II. சுற்றுச் சூழலை சுத்தமாக வைப்பது

III. நுளம்புச் சுருள்களை பற்ற வைப்பது

*22.* அதிக பிரயாணிகள் செல்ல முடியாத வாகனம்

*1.* துவிச்சக்கர வண்டி *2.* தொடருந்து *3.* கப்பல்

*23.* 

இதற்கு பொருத்தமானதாக வரக் கூடியது

*1.* 

*2.* 

*3.* 


*24.* குருவி, கூக்குரல், ............ இடைவெளிக்கு வரவேண்டியது?

I. கேள்வி II. கோழி III. கெடுதி

*25.* சரியாக எழுதப்பட்டது

I. ஓர் நதி II. ஒரு ஆமை III. ஓர் அணில்

ஆங்கில சொற்களுக்கு பொருத்தமான கருத்தை எழுதுக.

26. LEMON ..........................

27. HOBBY ..........................

28. HEN ..........................

பின்வரும் விபரத்தை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

**1kg சீனியும் 500g தேயிலையும் - ரூபா *175.00***

**1kg சீனியும் 400g பால்மாவும் - ரூபா *155.00***

**1kg சீனி ரூபா *35.00***

**500g தேயிலையும் 1kg விசுக்கோத்தும் - ரூபா *220.00***

*29.* 1kg விசுக்கோத்தின் விலை என்ன?

I. ரூபா *220* II. ரூபா *80* III. ரூபா *45*

*30.* *400* கிராம் பால்மாவின் விலை என்ன?

I. ரூபா *120* II. ரூபா *240* III. ரூபா *300*

வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்கள் யாது?

*31.*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 4 | → | 2 | 6 | 8 |
| 2 | 4 | 3 | → | | | |

I. *2,4,6* II. *4,8,6* III. *3,8,9*

*32.*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | → | 2 | 4 | 6 |
| 2 | 3 | 4 | → | | | |

I. *2,4,6* II. *4,6,8* III. *8,6,4*

*33.* சிறகுகளை விரித்தபடி தூங்கும் பிராணி எது?

I. தும்பி II. தேனீ III. கிளி

*34.* மீன்கள் தாம் செல்லும் திசையை மாற்றுவதற்கு உதவுவது

I. வாற்செட்டை II. முதுகுச்செட்டை

III. குதச்செட்டை

*35.* சமுதாயமாக வாழ விரும்பும் பிராணி எது?

I. காகம் II. கறையான் III. கிளி

*36.* உடலில் பட்டால் சொறியத் தொடங்கும் தாவரம் எது?

I. நாயுருவி II. துளசி III. காஞ்சொரி

*37.* இலங்கையில் *24* மணி நேரம் இயங்கும் அரச நிறுவனம்?

I. தபால் II. கல்வி III. விமான நிலையம்

*38.* ஞாபகச் சக்தி கூடிய மிருகம் எது?

I. சிங்கம் II. யானை III. மான்

*39.* நான் பாடசாலைக்குச் சென்ற முதல் நாள் என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருப்பது அவசியம்.

..................................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

(விடைகள் *11*ஆம் பக்கத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்



# போற்றுகிறேன் நான்

என் வாழ்வில் விளக்கேற்றிய ஆசிரியரே
என் அறிவை வளர்த்த ஆசிரியரே
எனக்கு கற்று தரும் ஆசிரியரே
என்னைக் கற்க சொல்லும் ஆசிரியரே

என் அறிவை நீட்டிய ஆசிரியரே
என் விளையாட்டை குறைத்த ஆசிரியரே
எனக்கு அறிவுரைகள் கூறும் ஆசிரியரே
என் மரியாதைக்குரிய ஆசிரியரே!

வாழ்த்துகிறேன் உமை என்றும்
வாழ்க உம் பணி
வளர்க உம் ஆயுள்!
போற்றுகிறேன் உமை நான்!

**ஏ.டபிள்யூ. பசீர்**
**தரம்-6**
**தி/ அல்இக்பால் வித்தியாலயம்**

# ஆசான்

**எம்.பி.எப். ஐப்ரா**
**தரம்-10**
**காத்தான்குடி-04**



அறிவை கொள்முதல்
செய்யும் களஞ்சியம்
ஆசான் என்னும் பொக்கிஷம்
எங்களின் எழுச்சிப் பயணங்களின்
மைல்கல் ஆசானே
உம் நிழலில் தான் நாங்கள்
முகாமிட்டுள்ளோம் - உம்
மூச்சுக் காற்றுக்களில் கூட
எங்கள் முகவரிகள்
நாளைய வரலாறுகளில்
எங்களின் வாழ்க்கை
உங்களைத்தான் உச்சரிக்கும்
இன்ஷா அல்லாஹ்...!

# வாழ்ந்து பார்

இவ்வுலகைப் பற்றி நினைத்துப் பார்
இன்பமான வாழ்வை ரசித்துப் பார்
துன்பத்திலும் சிறிது நுழைந்து பார்
துரோகியுடனும் பழகத் துணிந்து பார்

அல்லாஹ்வின் பேரருளை எண்ணிப் பார்
அனைத்திலும் உயர்ந்தவனை துதித்துப் பார்
ஆடம்பரமான வாழ்வை அழித்துப் பார்
அனைவருடனும் அன்பாகப் பழகிப் பார்

ஈமானை இதயத்தில் விதைத்துப் பார்
இறை கூறும் வழியில் நடந்து பார்
இஸ்லாத்தில் முழுதாய் வாழ்ந்து பார்
ஈருலகிலும் இறைவன் உனைக் காப்பான்...

**பாத்திமா ரிகாஸா முக்தார்**
**பதுரிய்யா மத்திய கல்லூரி**
**மாவனல்லை**

# ஆசான் எனும் ஏணி

ஆசான் எனும் ஏணிகளே
உம் புகழ் கூற விழைகின்றேன்

பேதங்கள் கரைந்தோட - உலகின்
நாதங்கள் போல் ஒலித்தீரே

உதிப்பாம் பாலர் வகுப்பிலிருந்து
மதிப்பாம் பெற்றுத் தந்தீரே

உயர் கல்வியைத் தொடர்ந்து செல்ல
துயர் போக்கி உதவினீரே

கஷ்டமாய்க் கசக்கிய கல்வியை
இஷ்டமாய் ருசிக்க வைத்தீரே

உருவத்தைக் கண்டு இகழாது
புருவம் மலர உழைத்தீரே

புலமைப் பரிசில் பரீட்சையில்
நலவை எய்த வைத்தீரே
இம்மைக் கல்வியின் அவசியத்தை
செம்மையாய் உணர வைத்தீரே

எதிர்காலத்தின் வெற்றிக்காய்
கதிர் ஞானமாய்க் கற்றுத் தந்தீரே

மொத்தத்தில் நீங்கள் முத்தன்றோ
நித்தத்தில் தோன்றும் சொத்தன்றோ

**அய்மா நிஃமதுல்லாஹ்**
**கமு/ அல்ஹம்றா வித்தியாலயம்**
**மருதமுனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கல்லில் மலர்ந்த புஷ்பம்



**இயற்கை** அன்னை ஈன்றெடுத்த செல்வங்களுள் கடல் குழந்தையும் ஒன்று. கீழ்த் திசையில் தோணாக் கடலும், மேற்கே பெரி யாற்று முனை ஆறும் கட்டையாற்றுடன் சங்கமித்துச் செல்ல, அதன் மேலே மக்கள் போக் குவரத்துச் செய்வதற்குப் பாலமும் அமைக்கப் பட்டிருந்தது.

சுதந்திரமாய் நீந்திச் செல்லும் மீனினங்களைப் பிடிப்பதற்கு மீனவர்கள் சிலர் வலைகளுடனும் கற்களிலே பிடித்திருக்கும் கற்காயை எடுப்பதற்கு தோணிகளிலும் சென்று கொண்டிருந்தனர். அவற்றை வாங்குவதற்கு மக்கள் அணியணி யாய்ப் பாலத்தின் இரு மருங்கிலும் காத்து நிற்பர். வெள்ளிக் கிழமை ஜுமுஆவுக்கு செல்வதற்காக சிறியவர் முதல் பெரியவர் வரை கடலில் குளித்து மகிழ்வர்.

எல்லாவற்றையும் இரசித்தபடி மாணவச் செல்வங்களுக்கு கல்வித் தீனை ஊட்டுவதற்கு அல்அஹ்மர் பாடசாலைக்குச் செல்வார் அன்ஸீர் ஆசிரியர். சில்லென்ற காற்று மேனியைத் தொட் டுத் தாலாட்ட, கடற்கரையோரங்களில் காட்சி தரும் கண்டல் விருட்சங்கள் காற்றுக்கு பாட்டி சைக்க, மாணவர்களின் உள்ளங்களில் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்கள் பசு மரத்தாணி போல் பதியும்.

ஆயினும், மாணவர்கள் மிகவும் பின்தங்கிய சூழலில் உள்ளவர்களாகவும் பொருளாதார வசதி குன்றியவர்களாகவும் காணப்பட்டனர். அப் படிப்பட்ட மாணவர்களுக்கு கல்வியறிவை ஊட்டுவதில் மிகவும் மகிழ்வு கண்டார் அன்ஸீர். கற்பிப்பது அல்லாஹ்வினதும் அவனது ரஸுலி னதும் உவப்புக்குரிய ஒரு காரியமாகும். அதனை ஓர் இபாதத்தாக நினைத்தார்.

ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைந்ததும் மாணவர்களது முறையீடுகள் வந்த வண்ணமேயி ருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் வகுப்பறையைக் கூட்டவில்லை"

" அவன் பூ மரங்களுக்கு நீரூற்றவில்லை"

"இவன் அவனுக்கு அடித்தான்" என்றெல்லாம் மாணவர்கள் முறைப்படத் தொடங்கி விடுவர்.

"நான் பாடசாலைக்கு வந்ததும் வராததுமாகக் குறை கூறத்தொடங்கிவிடுவீர்கள், இது தவறு. மற்றவர்களைக் குறை கூறுவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை; எனவே மாணவர்களே! நீங்கள் மற்றவர்களைக் குறை கூறாதீர்கள். எல்லோருக்கும் பாடசாலையில் பல பொறுப்புக்கள் உண்டு. அதை நீங்கள் சரிவரச் செய்தால் சரி. வீணாய்ப் பிரச்சினைகள் எழ வாய்ப்பிருக்காதல்லவா? இனிமேல் என்னிடம் யாரும் யாரைப் பற்றியும் பேசக் கூடாது" என்று ஆசிரியர் கண்டிப்பாகக் கூறினார்.

அன்றிலிருந்து மாணவர்கள் குறை கூறுவதைத் தவிர்த்துக் கொண்டனர். ஒருவரை ஒருவர் அன்போடு புரிந்து ஒற்றுமையாகச் செயல்பட்டனர். மாணவர்களிடையே சகோதரத்துவம் ஓங்கி வளர்ந்தது. சிறிது காலத்தின் பின் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையானது. ''சேர்! எனது காசைக் காணவில்லை" என்றான் சனூஸ்.

''என்னுடைய காசையும் காணவில்லை'' என்றாள் ஸஹ்னா.

"காசிக்கு என்ன நடந்தது...? கால் முளைத்து ஓடி விட்டதா...?'' என்று ஆசிரியர் கேட்க மாணவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.

"சேர் இவன்தான் எடுத்தான்".

''ஓ.... பாயிஸ் எடுத்ததைக் கண்டேன்'' என்றான் பாகிர். மற்ற மாணவர்களும் பாகிருக்கு ஆதரவு வழங்கினார்கள்.

''பாயிஸ் இங்கே வா..! உண்மையில் நீ எடுத்தாயா...?"

"இல்லை சேர்! நான் எடுக்கவில்லை எனக்குத் தெரியாது" அழுதான் பாயிஸ்.

அவன் அழுவதைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. அவன் எடுத்திருக்க மாட்டான். கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேற்பதும் பொய்; தீர விசாரிக்க வேண்டும். எனவே எல்லோரையும் விசாரித்தார் ஆசிரியர். ம்ஹூம்.... யாரும் எடுக்கவுமில்லை காணவுமில்லை என்றனர். எல்லோரது புத்தகம், கொப்பி, செப்பு, பை (Bag) எல்லாவற்றையும் தேடியும் பணம் கிடைக்கவில்லை.

மறு நாளும் அதே பல்லவி. "எனது இருபது ரூபாவைக் காணவில்லை." "எனது பத்து ரூபாவைக் காணவில்லை" என்றனர்.

ஒவ்வெரு நாளும் இரண்டு, மூன்று பேரின் பணம் திருட்டுப் போகிறது. அத்திருடன் வகுப்பறையினுள்ளேதான் இருக்கிறான்.

"வேறு வகுப்பு மாணவர்கள் இங்கே வருகிறார்களா?" ஆசிரியர் வினவினார்.

"இல்லை சேர்!" மீண்டும் எல்லா மாணவர்களும் பாயிஸையே குற்றம் சாட்டினார்கள்.

"இவ்வளவு மாணவர்கள் இருக்கும் போது உன்னை மட்டும் ஏன் சொல்கிறார்கள்...?" இரு அடி கொடுத்துவிட்டு, ''உண்மையைச் சொல்லுடா" ஆசிரியர் மிரட்டினார். "இஞ்சேப் பாரு! நீ .. ஆசிரியருக்கோ, மாணவர்களுக்கோ தெரியாமல் எடுக்கலாம். ஆனால்... அல்லாஹ்வுக்கு மறைக்க முடியாது. அவன் எல்லாவற்றையும் அறிந்தவன். இதற்கு மேலும் பொய் சொல்லாதே! அல்லாஹ் உன்னைப் பாவத்தில் போடுவான். இனியும் திருடாதே'' என்றார் அன்ஸீர் ஆசிரியர்.

''நான் எடுக்கல்ல சேர்!" தேம்பித் தேம்பி அழுதான். இதற்கு மேல் இவனை எப்படித் திருடன் என்பது...? "ஏழையைக் கண்டால் மூளையும் பாயும்" என்பார்கள். இவன் விடயத்திலும் இப்படித்தானோ? ஆசிரியர் உள்ளத்தில் ஆயிரம் கேள்விகள் தோன்றி மறைந்தன. பாயிஸ் நிஜமாகவே திருடுகின்றானா? சோதித்துப் பார்க்க வேண்டும் என மனதில் திடசங்கற்பம் பூண்டார். மறு நாள் மேசையில் ஐநூறு ரூபாவை வைத்துவிட்டு, மாணவர்களை உடற் பயிற்சி செய்வதற்காக அழைத்துச் சென்றார். சற்று நேரத்தின் பின் மேசையை அவதானித்தபோது, அங்கே பணமிருக்கவில்லை. மாணவர்களை விசாரித்தார். நாம் எடுக்கவில்லை என்றனர்.

"சேர், பாயிஸ்தான் வந்தான்."

" அவன் உடற் பயிற்சி செய்து கொண்டல்லவா நின்றான், அவன் எப்படி எடுப்பான்?" ஆசிரியர் கேட்டார்.

''உடற் பயிற்சி முடிந்ததும் முதலில் வகுப்புக்கு வந்தது அவன்தான். பாயிஸ் மேசைக்கு அருகில் நின்றதை நாம் பார்த்தோம்." வகுப்பு மாணவர்கள் ஒன்று சேர்ந்து குற்றஞ் சாட்டினர். "நான் எடுக்கல்ல சேர்." கேவிக் கேவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதான். ஆசிரியர் இரண்டு போடு போட்டார். "நான் எடுக்கல்ல சேர்." வாய் விட்டுக் கதறினான்.

"நீ அழுதழுதே தப்பித்து விடுகிறாய் என்ன?"

"எனக்குத் தெரியாது சேர்!"

"சும்மா வாயைப் பொத்துடா! நானும் எவ்வளவு புத்திமதிகளைக் கூறிவிட்டேன் நீ திருந்துவதாக இல்லை. உன்னை என்ன செய்ய...?" ஆவேசத்துடன் கத்தினார் ஆசிரியர்.

ஏனைய ஆசிரியர்கள் பாயிஸுக்காகப் பரிந்து பேசினர்.

"ஆரம்பத்தில் நானும் இவ்வாறுதான் நினைத்தேன். பின்புதான் இவனது திருட்டு முழியும் அழுகையும் எனக்குப் புரிந்தது. இவன் எப்படியும் எனது ஐநூறு ரூபாவைத் தர வேண்டும். எங்கே வைத்தாய்...? உண்மையைச் சொல்".

"எனக்குத் தெரியாது நான் எடுக்கல்ல!" ஒரே முடிவாகக் கூறி முடித்தான் பாயிஸ்.

"இவன் எடுத்திருக் மாட்டான் சேர். வேறு யாராவது திருடி விட்டு பாயிஸின் தலையில் பழியைப் போடுகிறார்கள்" என்றார் நளீம் சேர்.

"யார் எதைக் கூறினாலும் எனக்கு பாயிஸின் மீதே சந்தேகம். அவன்தான் எடுத்தான் இது வேறு யாரும் திருடல்ல." திட்டமாகவே கூறினார் அன்ஸீர் ஆசிரியர்.

"எனக்கு ஐநூறு ரூபாய் பெரிதல்ல. பாயிஸின் எதிர்காலம் பாழாகக் கூடாது. இன்று சிறிய களவில் ஆரம்பித்து, நாளை அவன் பெரிய கிரிமினலாக மாறினால்... நாம் கற்பிப்பதில் எவ்வித அர்த்தமுமில்லையே. எத்தனை ஹதீஸ்களைக் கூறியும் இன்னும் அவன் உள்ளத்தில் பயம் வராவிட்டால்... நாளை நாமும் அல்லாஹ்வுக்கு பதில் கூறியே ஆகவேண்டும்". அன்ஸீர் ஆசிரியரின் உள்ளம் வேதனையால் குமுறியது.

பாயிஸைக் கையிலே அமுக்குப் பிடியாக பிடித்துக் கொண்டார். "எனக்கு அந்த ஐநூறு ரூபாய் வேண்டாம். நீ உண்மையைச் சொல் அல்லாஹ் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். நாம் அவனிடம் தப்பித்துக் கொள்ள முடியாது. அவன் திருடியவர்களை நெருப்புக் கிடங்கில் போடுவான். உன்க்குப் பயமில்லையா? நீ சிறிய பொருளுக்கு ஆசைப்பட்டால், பெரிய பொருளை இழப்பாய். உனக்கு ஏதேனும் தேவை என்றால், என்னிடம் கேள் தருகிறேன். திருடாதே!" என்று ஆசிரியர் கெஞ்சினார்.

"உன் தந்தை என்ன செய்கிறார்? என்னிடம் வரச் சொல்" என்றார்.

"எனக்கு வாப்பா இல்லை சேர். உம்மா பக்கத்து வீட்டில் கூலி வேலை செய்தே என்னைப் படிக்க வைக்கிறாள்" என்றான்.

ஆசிரியருக்கு பாயிஸ் மீது பரிதாபம் ஏற்பட்டது. வறுமை காரணமாகவே இவன் திருடுகிறான் எனும் முடிவுக்கு வந்தார். "பாயிஸ் அந்த ஐநூறு ரூபாவை நீதானே எடுத்தாய்..? நான் ஒன்றும் செய்ய மாட்டேன் சொல்" என்றார். அவன் உண்மையை ஒத்துக் கொண்டான்.

"என்னை மன்னியுங்கள் சேர். நான்தான் எடுத்தேன். இனித் திருடவே மாட்டேன்" என்று அழுதான் பின் ஆசிரியருடன் சென்று தான் புதைத்து வைத்த பணத்தை மண்ணிற்குள்ளிருந்து எடுத்து 500/= ஐ சேரிடம் கொடுத்தான். எல்லோருக்கும் ஒரே அதிர்ச்சி. "நீயே வைத்துக் கொள். இனி மேல் திருடாதே!"

"உன்னைக் குர்ஆன் மத்ரஸாவில் சேர்த்து விடுகிறேன். குர்ஆனை மனனஞ் செய்து ஹாபிழாக வா. உனக்கு இம்மைக்கும் மறுமைக்கும் ஈடேற்றம் கிடைக்கும்" என ஆசிரியர் கூற அவனும் சம்மதித்தான்.

பாயிஸின் தாயை அழைத்து விடயத்தைக் கூறினார். இருவரது சம்மதத்துடனும் மத்ரஸாவில் சேர்த்தார். அவன் குர்ஆனை மனனஞ் செய்வதில் மிகத் திறமை காட்டினான். பின் ஹாபிழாக வெளியேறி பாடசாலைப் படிப்பையும் தொடர்ந்தான். அதிபர், ஆசிரியர்களால் பாராட்டுப் பெற்றான்.

மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவாகி அங்கே மிகச் சிறந்த மாணவனாகத் தேறி வைத்தியராக வெளியேறினான். சமூகத்திற்குப் பல சேவைகளைச் செய்தான். மக்கள் அவனது அருந் தொண்டைப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

நாட்டுக்கு நற்பிரஜையை உருவாக்கிய பெருமை அன்ஸீர் ஆசிரியரையே சாரும் என மக்கள் பேசிக் கொண்டனர். பாயிஸின் முன்னேற்றம் சமூகத்துக்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் நல்ல பயனளிக்கும் எனும் திருப்தியோடு தன் ஆசிரியப் பணியைத் தொடர்கிறார் அன்ஸீர் ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள்



றி.எம். ஜெஸ்ஹரா, தரம்-6
கமு/ ஷம்ஸ் மத்திய கல்லூரி,
மருதமுனை



எம்.யூ.எப்.ஹஸ்னா
தரம்-6
க/ அல்ஷபா.மு.ம.வி



தாஜுதீன் முர்ஷிதா
தரம்-7
பள்ளிவாசல்துறை மு.ம.வி



எம்.எம். பாத்திமா முனீரா
தரம்-6
குளி/ண்டாரகொஸ்வத்த மு.ம.வி



எப். ராயிதா பஸால்
தரம்-4
இக்ரா சர்வதேச பாடசாலை



எம்.எஸ்.எப். சுமையா, தரம்-7
கா/ஸாஹிரா தேசிய பாடசாலை
கிந்தோட்டை



எம்.என். பாத்திமா நிஸ்மா
பு/ செய்னப் முஸ்லிம் பெண்கள்
ஆரம்பப் பாடசாலை, புத்தளம்



ஸஹ்ரான் பைஸல், தரம்-3
அல்மிஸ்பாஹ் மு.ம.வி.,
மாதம்பை



எம்.ஏ.எம்.ரிமாஸ்
தரம்-7
ஹ/ ஸாஹிரா தேசிய பாடசாலை

அடுத்த சித்திரத்திற்கான
தலைப்பு

## காட்டுத்தீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரே, மாணவர்களே!

# உங்கள் இல்லங்களை பயனுள்ள வாசிப்பால் பூரணப்படுத்துங்கள்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.







இஸ்லாமிய குடும்ப சஞ்சிகை




அரசியல், சமூக விவகார ஏடு




சிங்கள மாத இதழ்




மாதாந்த சிறுவர் சஞ்சிகை

## எமது வெளியீடுகளை வாசியுங்கள்...















# முழுக் குடும்பமும் பயன்பெறுங்கள்!

அல்ஹஸனாத் வெளியீட்டகம்
77, தெமடகொட வீதி, கொழும்பு 00900 தொலைபேசி 0112689324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org